
Registered as a news paper. பக்கங்கள்: பதின்நான்கு விலை: ரூபா 6.00

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்பு கொள்ள
உள்நாடு வெளிநாடுகளுக்கான சகல விதமான
துரித தபால் / பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency Post Office
303, K.K.S ROAD, JAFFNA T.P- 021-222 2670,
FAX-222 3214, email-del-smskr@eureka.lk


# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஐப்பசி 07 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷஃபான் 27 (24.10.2003) வெள்ளிக்கிழமை இதழ் :24





இலங்கையின் கராத்தே தந்தை கிராண்ட் மாஸ்ரர் சீகான் பொனி றொபேட்டஸூடன் ஆறாவது கறுப்புப்பட்டி கௌரவ விருதைப்பெற்ற, தமிழீழ தேசியத் தலைவரை முதற்படத்திலும் - றொபேட்டஸூக்கு தேசியத் தலைவர் விருது வழங்கி கௌரவிப்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

# கண்காணிப்பு குழுத் தலைவரை பதவி நீக்குமாறு நோர்வேப் பிரதமருக்கு சந்திரிகா அவசர கடிதம்!

## பாரபட்சமாக நடப்பதாக குற்றச்சாட்டு





(கொழும்பு)

**போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ட்ரை கேவ் ரெலவ்சனைப் பதவியிலிருந்து நீக்கும்படி, நோர்வே பிரதமர் கஜல் மக்னே பொண்டவிக்கிற்கு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவசர கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.**

**சமாதான ஏற்பாட்டாளரான நோர்வே நாட்டின் பிரதமர் பொண்டவிக்கிற்கு, மூன்று பந்திகளைக் கொண்ட கடிதமொன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று அனுப்பி வைத்தார். அந்தக் கடிதத்தில் மேலும், தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,**

கண்காணிப்புக் குழுவின் தலைவர் - புலிகளுக்கு ஆதரவாக செயற்படுவதுடன், புலிகளின் ஆயுதக் கப்பலை கடற்படையினர் கைப்பற்ற முயன்ற முயற்சி தோல்வியடையக் காரணமாக இருந்துள்ளார் எனவும், வருத்தத்துடன் குறிப்பிடுகிறேன்.

ஜெனரல் ரெலவ்சன் பொறுப்பற்றதனமாக நடந்து கொள்வதால் இலங்கையின் இறைமைக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தனது கடமைகளில் ரெலவ்சன் பாரபட்சமற்ற வகையில் செயல்படுகிறாரா என்பது குறித்து ஆழமாகச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

எனவே - இந்தப் பதவியிலிருந்து அவரை நீக்க நடவடிக்கை எடுக்கவும் என குறிப்பிடப்பட்டுள்ளது.




வாசகர்கள், விளம்பரதாரர்கள், முகவர்கள் மற்றும் அபிமானிகள் அனைவருக்கும் நமது ஈழநாட்டின் தீபாவளி வாழ்த்துக்கள் உரித்தாகுக.

## பருத்தித்துறையில் மீனவர் தாக்குதல்; வடமராட்சியில் நாளை மறியற் போர்!

(வடமராட்சி)

கடந்த வியாழக்கிழமை பருத்தித்துறையில் படையினரால் மீனவர்கள் தாக்கப்பட்டதை எதிர்த்து நாளை வடமராட்சி வடக்கில் கடற்றொழிலாளர் சங்க சமாசத்தால் - கண்டனப் பேரணியும், மறியற்போராட்டமும் நடத்தப்படவுள்ளது.

நாளை காலை 7 மணிக்கு தோம்பர் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகும் இந்தப் பேரணி மூன்றாம் குறுக்குத்தெரு ஊடாக பருத்தித்துறை-தும்பளை வீதியையடைந்து அங்கிருந்து மெத்தைகடை சந்தியூடாக பருத்தித்துறை பிரதேச செயலகத்தை சென்றடையும். அங்கு பிரதேச செயலரிடம் மகஜரும் கையளிக்கப்படவுள்ளது.

மீனவர்களுக்கான பாஸ் நடை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் மீன்பிடிப்படகு படையினரால் தாக்கி மூழ்கடிப்பு!

(வடமராட்சி)

பருத்தித்துறை முனைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவங்களின் தொடர்ச்சியாக கடற்கரையில் நின்ற மீனவர்களின் படகுகள் சில படையினரால் தாக்கி மூழ்கடிக்கப்பட்டுள்ளன.

இரண்டு பிளாஸ்ரிக் படகுகளையே படையினர் கூரிய ஆயுதங்களைப் பயன்படுத்தி தாக்கி மூழ்கடித்தனர். அங்கு தரித்துநின்ற கட்டுமரமொன்றும், அதனில் பொருத்தப்பட்டிருந்த வெளியிணைப்பு இயந்திரமும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை - கடற்கரையில் திரண்ட மக்கள் கடலில் மூழ்கிய பிளாஸ்ரிக் படகுகளையும், சேதமடைந்த கட்டு மரத்தினையும் மீட்டனர். மூழ்கடிக்கப்பட்ட படகுகளில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கராத்தே மாஸ்ரர் பொனி றொபேட்ஸூக்கு தலைவர் பிரபா விருதுவழங்கி கௌரவிப்பு!

(கிளிநொச்சி)

இலங்கையின் கராத்தே தந்தையும் எட்டாவது கறுப்புப்பட்டி பெற்றவருமான கிராண்ட் மாஸ்ரர் சீகான் பொனி றொபேட்ஸ் **(Grand Master Shihan Bonnie Roberts)** கராத்தே கலையின் வளர்ச்சிக்கு ஆற்றிய சேவையையும், பங்களிப்பையும் பாராட்டி தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் புலி இலச்சினை பொறிக்கப்பட்ட தேசிய விருதினையும், நினைவுப் பரிசினையும் வழங்கிக் கௌரவித்தார்.

நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் சேர்.தங்கன், தமிழீழ விளையாட்டுத்துறை (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலி உறுப்பினர்கள் கைதானதை எதிர்த்த பொதுமக்கள் மீது படையினர் தாக்குதல்; கிண்ணியாவில் பதற்றம்; ஊரடங்கு அமுல்!

(திருகோணமலை)

திருகோணமலை கிண்ணியாவில், நேற்று, மூன்று விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் படையினரால் கைதாகியதையடுத்து, படையினர் மீது பொதுமக்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனையடுத்துப் படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில், நான்கு பேர் காயமுற்றனர். இதன் பின்னர் ஏற்பட்ட பதற்றநிலையையடுத்து கிண்ணியாவில் நேற்று காலை ஆறுமணி தொடக்கம் இன்று மாலை ஆறு மணிவரை ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டது.

பச்சை மரங்களை வெட்டிய நான்கு விறகு வண்டிகளை, தண்டப் பணம் செலுத்துமாறு தடுத்து வைக்கப்பட்டதைக் கண்டித்து, நேற்று கிண்ணியா முஸ்லிம் சங்கத்தால்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்திலுள்ள
# கலப்பு வலைப்பந்தாட்ட அணி அநுராதபுரம் செல்கின்றது!

இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனம் நடத்தும் - மாவட்ட சங்கங்களுக்கிடையிலான போட்டியில் பங்குபற்ற, பயிற்றுனர் திருமதி ஜே.ரூபசிங்கம் தலைமையிலான யாழ்.மாவட்ட கலப்பு வலைபந்தாட்ட அணி, இன்று அநுராதபுரம் செல்கின்றது. அணியின் வீர வீராங்கனைகள் விபரம் வருமாறு -

சூடாமணி அகிலன் (அணித் தலைவர்), தயாளினி செல்வராஜா (உபதலைவர்), சந்திரமதி தவராஜா, மாலினி மகாலிங்கம், அருமைத்துரை அனந்தன், குருசாமி முகுந்தன, கந்தவனம் விஜிதரன், குமாரசூரியர் செந்தில்குமரன், விஜயந்தி சந்திரபாலன், கௌரி தேவராஜா, சி.சுரேந்தினி (அணி முகாமையாளர்).

இந்தப் போட்டியில் பெண்கள் அணியில் இடம்பெறும் வீராங்கனைகள் -

பிரபா பரமேஸ்வரன் (அணித் தலைவி), சுகுணா சூடாமணி (உப தலைவி), நொறின் நீரஜா றிச்சட், மதிவதனா சுந்தரலிங்கம், ஜெரால்டின் ரெமின்டா ஜோன் விக்ரர், நிலாந்தி பாலகிருஷ்ணன், நிஷாந்தி இராஜரட்ணம், சுகிர்தா தில்லைநாதன், வத்சலா நீலமேகம், வர்சினி சந்திரகுமாரன், றொபினா உதயந்தி கந்தவனம், சுகந்தினி செல்வராஜா.

### மரத்தால் விழுந்து இளைஞன் மரணம்

மரத்தால் காயமுற்ற நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட புதுக்குடியிருப்பை சேர்ந்த கே. முரளிதரன் (வயது20) என்பவர் நேற்றுமுன்தினம் சிகிச்சை பலனளிக்காத நிலையில் மரணமானார்.

# தீபாவளி தினத்தை முன்னிட்டு தடகள விளையாட்டுப்போட்டி

தீபாவளி தினத்தை முன்னிட்டு இன்று கண்ணகி அம்மன் ஸ்ரார் விளையாட்டுக் கழகங்கள் இணைந்து தடகள விளையாட்டுப் போட்டியினை நடாத்தவுள்ளன.

இன்று பிற்பகல் கோப்பாய் ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில், டி.தயாகரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக வலி.கிழக்கு பிரதேச செயலர் வெங்கடாசலம், யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளனும், கௌரவ விருந்தினர்களாக, விவசாய போதனாசிரியர் ச.பாலகிருஷ்ணன், ஓய்வு பெற்ற உபதபாலதிபர் இ.இராசரத்தினம், யாழ்ப்பாண கொமர்ஷல் வங்கியைச் சேர்ந்த ச.தேவரஞ்சன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.


எமது சேவையால் மணவாழ்வில் இணைந்து இன்பமுடன் தீபாவளியை கொண்டாடும் மணமக்களிற்கு எமது மனம் கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்

துர்க்கா திருமண சேவை

101/1,ஓட்டுமடம் வீதி, சிவலிங்கப்புளியடி.
K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
(513)

ராஜா யாழ்ப்பாணம்.
இன்று முதல்
பிதாமகன்
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1619)

நிறைஞ்சனாஸ் சங்கானை
நிறைஞ்சனாஸ் ரசிகர்களுக்கு தித்திக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்
ஜீவா, ஸ்ரீதேவி நடித்த
தித்திக்குதே
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
T.TOX
(சி-1618)

மலிவு விற்பனை
மில்க்வைற் சோப் 6/- ரூபாவிற்கு மொத்தமாக விற்பனை வாகனத்திலும், தொழிற்சாலையிலும் பெற்றுக் கொள்ளலாம்.
மில்க்வைற்
த.பெ.இல.77
யாழ்ப்பாணம்.
(சி-1640)

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எம் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்





சிறந்த தரமான தங்கத்தில் மனங்கவர் வண்ணங்களில் தங்கநகைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நாடுங்கள்
சாருகா நகைமாடம்
172 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ராஜா தியேட்டர் முன்பாக) T.P:-0777-296374
உரிமையாளர்கள் பா.கோபி வா.குணா
(சி-1731)

கருமாரி அம்மன் அருள்பெற்ற சோதிடர் சுபா.கணேசலிங்கம்





இவரின் வழிகாட்டலால் சுபீட்சம் பெற்றவர்கள் பலர். அவர்களில் நீங்களும் ஒருவராக, உடன் இவரைச் சந்தியுங்கள் உங்கள் பிரச்சினைகளுக்கு அனுகூலமான தீர்வினைக்காண உடன் விஜயம் செய்யுங்கள்.
ROOM.185
நியூ ஆனந்தா மேல்மேடி
கஸ்தூரியார் வீதி,
(பவர் செலூலர் கம்பனி அருகில்)
பார்க்கும் நேரம்:- காலை 9.00- மாலை 5.00 வரை
(சி-1735)

வாடிக்கையாளர்களுக்கு எமது உளம் கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்
ஜோ.எகட்டனின் ஜெசித்தாரா
வழங்கும் விசேட குங்குமப்பூபுரியாணி வழமையான உணவுப் பொதிகளும்
ஜெசித்தாரா விருந்தகம்
19/3 கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி.
உள் அழைப்புக்கு:-0777 032188
அதிரடி அழைப்புக்கு:-071-399166
(சி-1734)

அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்
சப்புபலகை சகல விதமான அளவுகளிலும் றீப்பை வகைகள், தீராந்தி வகைகள் அனைத்தும் சகாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
ஓடரிற்கு தளபாடம் நியாய விலையில் செய்து கொடுக்கப்படும்.
மாத்தளை மரக்காலை
34,பள்ளிவாசல் ஒழுங்கை
யாழ்ப்பாணம்.
(சி-1727)

வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்
சகலவிதமான மங்கல விழாக்களுக்கும் சிறந்த சேவையை மனநிறைவான விதத்தில் படம் பிடித்துத் தருவதற்கு நீங்கள் நாடவேண்டிய இடம்
சுதாஸ் வீடியோ
182, செம்மணி வீதி, நல்லூர்.
T.P 021-2225324
(சி-1733)

அனைவருக்கும் எம் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்
சுஜெ சித்த மருத்துவ நிலையம்
SUJAY SIDDHA MEDICAL CENTRE
★மருத்துவ ஆலோசனைகள் ★சித்த மருத்துவ சிகிச்சைகள்
பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
83, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
Mobile No:-0777-737357
(சி-1732)


## அல்வாய் வேவிலந்தை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

தேவஸ்தானத்தின் இம்மாத சிறப்பு உற்சவங்கள்

25.10.2003 சனிக்கிழமை கௌரி காப்பு கட்டுதல்
26.10.2003 ஞாயிற்றுக்கிழமை கந்தஷ்ஷடி ஆரம்பம்
30.10.2003 வியாழக்கிழமை கந்தஷஷ்டி முடிவு, சூரன்போர்
31.10.2003 முருகன் திருக்கல்யாணம்

அடியார்கள் அனைவருக்கும் அம்பாள் அருள்பாலிக்க பிரார்த்திக்கின்றோம்.

(சி-1729) தேவஸ்தான பரிபாலன சபையினர்.

## நமது ஈழநாடு நடாத்தும்
## 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான இலவச முன்னோடிக் கருத்தரங்கு 2003

விபரங்கள் வெகுவிரைவில் நமது ஈழநாடு நாளிதழில் வெளிவரும்.

அனுசரணை வழங்குவோர்

ஹரிஹரனன் பிறிண்டேர்ஸ்
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
செலான் வங்கி டிக்கிரி கணக்கு
இலங்கை வங்கி தேசத்தின் வங்கியாளர்

# இலங்கையின் பாதுகாப்பு விடயங்களில் இந்தியா மிகுந்த அக்கறை கொண்டுள்ளது!

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



இலங்கையின் பாதுகாப்பு விடயத்தில், இந்தியா மிகுந்த அக்கறையாக உள்ளது. இந்த பாதுகாப்பு விடயம் தொடர்பாக 1987 ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை, தொடர்ந்து பின்பற்றப் படும். இந்த விடயத்தில் இருநாடுகளும் தமது நிலைப்பாடுகளைக் கடித மூலம் பரிமாறிக்கொண்டுள்ளன.

எனினும், இந்தியாவின் பாதுகாப்புக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் இலங்கை செயற்படாது. அதேபோல, இலங்கையின் பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படும் வகையில் இந்தியா செயற்படாதென்பதில் இந்தியா உறுதியாக உள்ளது.

இவ்வாறு இந்தியாவிற்கான மூன்று நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு, கொழும்பு திரும்பிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

இந்தியாவுடன் பலதரப்பட்ட விடயங்களில் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளும் வகையில், கடந்த ஒன்றரை வருடமாகப் பேசசுவார்த்தை நடத்தப்பட்டது. அத்துடன், இந்தியாவுடன் நிலவிவந்த பல்வேறு கருத்துவேறுபாடுகளைக் களைவதற்காகப் பல்வேறு விடயங்கள் எனது விஜயத்தின்போது ஆராயப்பட்டதுடன், பொருளாதார கூட்டுறவு பங்களிப்பு உடன்படிக்கை கடந்த திங்கட்கிழமை தம்மிடம் சமர்ப்பிக்கப்பட்டது எனவும், பிரதமர் தெரிவித்தார்.

இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை மார்ச் மாத இறுதியில் முன்னெடுக்கவுள்ளதாகவும் - பாதுகாப்பு, கூட்டுறவு விடயங்களைப் பொறுத்தவரை, கடந்த ஒன்றரை வருடங்களாக இந்தியாவில் அளிக்கபபடும் பயிற்சிகளில், இலங்கை இராணுவத்தினர் பங்கேற்பது அதிகரித்துள்ளதெனவும் தெரிவித்தார்.

இந்தியாவிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் ஆயுதங்கள், அந்த நாட்டிடம் நடத்தப்பட்டுவரும் ஆலோசனைகள் தொடர்பான உடன்படிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது. அதற்கான திகதி இன்னும் குறிப்பிடப்படவில்லை. அதுகுறித்து ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது.

இந்தியாவில் பயிற்சி வழங்கப்படும இடங்கள் கடந்த ஒன்றரை வருடங்களில் அதிகரிக்கப்பட்டுள்ளன. முதற்தடவையாக ஆபத்து மிக்கதும், சாதாரணமான ஆயுதங்களையும் இந்தியாவிடமிருந்து கொள்வனவு செய்துவருவதால், இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு செயற்படவேண்டியுள்ளது.

இருநாடுகளுக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் உற்பத்திப் பொருட்கள், விவசாயப் பொருட்களுடன் மட்டும் நில்லாது, பல்வேறு சேவைகள், முதலீடுகளும் உள்ளடக்கப்படுகிறது. சம்பந்தமாகவும் அமையும். இந்த உடன்படிக்கை - தொடர்ச்சியான பொருளாதார நடவடிக்கைகளை உள்ளடக்கியதாக அமையும். சில விடயங்களில் இரு நாடுகளும் பலன்பெறும் வகையில் பிரேரணை முன்வைக்கப் படும். சில இறக்குமதிகளுக்குத் தீர்வை அறவிடப்படமாட்டாது.

ரயில்வே கட்டமைப்பு, அதனை நவீனமயப்படுத்துவது, ரயில் பாதைகளைப் புனரமைப்பது என்பவற்றை இந்திய ரயில்வேக்கு உட்பட்ட இந்திய நிறுவனம் ஒன்று கையாளும். இதனைவிடவும் பல விடயங்கள் ஆலோசிககப்பட்டு வருகின்றன. மொத்தத்தில் இந்தியாவுடனான உடன்படிக்கை மிகவும் பயனுடையதாக உள்ளதெனப் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

### கைக்குண்டுத் தாக்குதலில் பொலநறுவை வாசி உயிரிழப்பு

பொலநறுவை - மன்னம்பிட்டி சிகை அலங்கார நிலையமொன்றின் மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில், ஒருவர் கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்டவர் அக்கடையின் உரிமையாளர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து நடந்த துப்பாக்கிச் சமரில் 5 பேர் காயமடைந்தனர்.


காயமடைந்தவர்கள் பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இரண்டு பேரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (01)

### படுகொலை செய்த மூவருக்கு மரண தண்டனை

(கொழும்பு)

10 வருடத்திற்கு முன்னர் வெல்லாவ பிரதேசத்தில் - ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேரைக் கொலை செய்தது தொடர்பாக, மூவருக்கு மரணதண்டனை விதிக்கப் பட்டிருக்கிறது.

1994 ஆம் ஆண்டு தம்பியையும் இரண்டு புதல்வர்களையும் இவர்கள் படுகொலை செய்தார்கள். பதுளை மேல்நீதிமன்றம் இவர்களுக்கு மரண தண்டனைத் தீர்ப்பை வழங்கி இருக்கிறது.



விகாரமாதேவீ பூங்காவில் ஜே.வீ.பீ.யினர் நடத்திய தேசிய நிகழ்ச்சித் திட்டத்தில், கலந்துகொண்ட ஜே.வீ.பீ.உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களைப் படத்தில் காணலாம்.

# யுத்தம் மீண்டும் ஆரம்பித்தால் எதிர்கொள்ள அரசு தயாராம்

## ரீரோன் பெர்னாண்டோ தெரிவிப்பு

(சென்னை)

யுத்தநிறுத்தம் முறிந்து, மீண்டும் விடுதலைப் புலிகள் தாக்குதலை ஆரம்பிப்பார்களாக இருந்தால், அதனை எதிர்கொள்ள அரசாங்கம் தயார்நிலையில் உள்ளது.

இவ்வாறு இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ரீரோன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்தியாவிற்கு விஜயம் செய்த அமைச்சர் - 'இந்து' பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது சமாதானப் பேச்சுவார்தைகள் முறிவடைந்த நிலையில். உள்ளதென்று நான் கூறமாட்டேன். விடுதலைப் புலிகள் இந்த சமாதான காலத்தில் அளவிட முடியாத அளவில் தமது ஆளணியை அதிகரித்துள்ளனர்.

இந்த சமாதான முயற்சி வெற்றியடையுமென நான் கூடுதலான நம்பக்கை வைத்துள்ளேன். ஆனால், விடுதலைப் புலிகளுக்கும் அது தெரியவேண்டும். அவர்கள் இதனை வெற்றி அடைய வைக்கவில்லையெனின், அவர்களும் எல்லாவற்றையும் இழக்க வேண்டியநிலை உருவாகும்.

அரசாங்கம், விடுதலைப் புலிகள் கேட்டதை கொடுத்ததுபோல, புலிகளும் விட்டுக்கொடுக்க முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## தளபதிகள், பொறுப்பாளர்களுடன் கேணல் கருணா அம்மான் சந்திப்பு!

(மட்டக்களப்பு)

அயர்லாந்திற்கு அண்மையில் பயணமான தமிழீழ விடுதலைப் புலிகளின் குழுவில் இடம்பெற்ற மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி கேணல் கருணா அம்மான - கடந்த இரு தினங்களாக மூத்த தளபதிகள், பிராந்திய, கோட்ட, பிரதேச அரசியற்துறை பொறுப்பாளர்களுடன் கலந்துரையாடல்களை நடாத்தி வருகின்றார்.

அரச படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் - அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த அலுவலக பொறுப்பாளர்களும், தரவை தேனகம் விடுதிக்கு அழைக்கப்பட்டு, இடைக்கால நிர்வாகசபை பதில் வரைவு மற்றும் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக் கப்படுகிறது. மட்டக்களப்பு - அம்பாறை பிரதேசத்தில் தமிழ் - முஸ்லிம் உறவுகளை பலப்படுத்தும் அதேவேளை, எதிர்காலத்தில் செயற்படுத்த வேண்டிய அணுகுமுறைகள் குறித்தும் கேணல் கருணா அம்மான் விளக்கமளித்ததாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

### பொங்குதமிழின் எதிரொலியாக

## சிஹல உறுமய நடத்தும் சிஹல உதான நிகழ்வு!

(கொழும்பு)

தமிழ்மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் பொங்கு தமிழ் நிகழ்வுபோல, சிங்கள மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் சிஹல உதான என்ற பெயரில், சிஹல உறுமயவும் ஒரு நிகழ்வினை நடத்தவுள்ளது.

இந்த நிகழ்வு - அடுத்தமாதம் முதலாவதாக வவுனியாவில் நடத்தப் படவுள்ளது. இதில் சிங்கள மக்களின் கலாசாரம், அரசியல் என்பன கருப்பொருட்களாக எடுக்கப்படுமெனவும், சிஹல உறுமய தெரிவித்தது.

வவுனியாவில் நடைபெறும் நிகழ்வினை அடுத்து, நாட்டின் சகல மாவட்டங்களிலும் தொடர்ச்சியாக இந்த நிகழ்வு நடத்தப்படுமென சிஹல உறுமய அறிவித்துள்ளது. (01)




திருகோணமலையில் சமாதானத்திற்கு எதிராக, சிஹல உறுமய நேற்று முன்தினம் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியைப் படத்தில் காணலாம்.

### மூதூர் பிரதேசத்தில்

## இறால்குழி படகுச்சேவை: 'நிக்கொட்' தொடக்கிவைப்பு!

திருகோணமலை - மூதூர் பிரதேசத்தில் இறால்குழிப்பகுதியில் நேற்றுக்காலை 10 மணியளவில் 'பாதை படகுச் சேவை' - நிக்கொட் நிறுவனத்தின் திட்டத்தின் கீழ் தொடக்கிவைக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாண சமுதாய அபிவிருத்தி திட்டத்தின் கீழ், ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆதரவுடன் 35 லட்சம் ரூபா செலவில் இந்தப் பாதை படகுச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் நிக்கொட் நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளர் ஆர்.உமாகந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில, முதன்மை விருந்தினராக ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதி ஜோன் ஆர்.கூனியும், சிறப்பு விருந்தினராக வடக்கு - கிழக்கு மாகாண சமுதாய அபிவ்ருத்தி திட்டப்பணிப்பாளர் த.லங்காநேசனும், திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப் பாளர் திலக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

1984 ஆம் ஆண்டுவரை இந்த பாதை படகுச்சேவை நடைபெற்று வந்தது. அதற்கு பின் இந்திய இராணுவத்தினரால் இப்படகு அழிக்கப் பட்டதைத் தொடர்ந்து, இந்தப் படகுச்சேவை நிறுத்தப்பட்டிருந்தது. இதனால், மூதூர் பிரதேச மக்கள் தமது நாளாந்த தேவைகளை நிறைவேற்றுவதற்கு 15 கி.மீ. சுற்றியே செலல வேண்டியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (01)

### மாவீரர்களின் பெற்றோர்கள் தொடர்புகொள்க

(சண்டிலிப்பாய்)

வலி மேற்கு பிரதேசத்திற்குட் பட்ட மாவீரர்களின் பெற்றோர்கள்- தங்கள் அருகிலுள்ள அரசியற் துறை செயலகங்களுடன், எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு வலி.மேற்கு அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

# மீண்டும் தொகுதிவாரி தேர்தல்முறையை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும்!

## மல்வத்த மகாநாயக்கர் கூறுகிறார்

(கொழும்பு)

தொகுதிவாரி தேர்தல் முறையை மீண்டும் நடைமுறைப்படுத்தும் வகையில், தேர்தல் முறையில் மாற்றம் கொண்டுவரப்படவேண்டும் என்று, கண்டி மல்வத்த பௌத்த பீடத்தின் மகாநாயக்க தேரர் ரம்புக் வெல விபஸி தேரர் தெரிவித்தார்.

தேர்தல்முறை மறுசீரமைப்பு நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவரும், மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவருமான தினேஷ் குணவர்த்தன - மல்வத்தபீட மகாநாயக்கரைச் சந்தித்தபோதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மக்கள் பிரதிநிதிகள் தமக்குள் மோதிக்கொள்வதற்குக் காரணமாக அமைந்துள்ள விருப்பு வாக்கு முறையை ஒழித்துவிட்டு, மீண்டும் தொகுதிவாரி தேர்தல் முறையை உருவாக்குவதே மிகவும் உகந்தது.

தற்போதுள்ள தேர்தல் முறையில் சில பிரதேசங்களுக்கு எவருமே பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்படுவதில்லை. தொகுதிரீதியான தேர்தல்முறை நடைமுறைக்குக் கொண்டு வந்தால், நாடாளுமன்ற உறுப்பினர்கள - மக்களை விட்டு ஒதுங்க முடியாதென, மல்வத்த மகாநாயக்கர் மேலும் தெரிவித்தார்.

# தீபாவளித் திருநாளை இன்று கொண்டாடும் இந்துக்களை மகிழ்வோடு வாழ்த்துகிறோம்!

## தீபாவளி செய்தியில் யாழ்.ஆயர்

இந்துசமய சகோதரர்கள் தீபத் திருநாளாம் தீபாவளியை கொண்டாடும் இவ்வேளையில், அவர்களுக்கு எல்லா நலன்களும் கிடைக்கவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். இவ்வாறு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். ஆயரால் வெளியிடப்பட்டுள்ள தீபாவளிச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

எமது இந்துசமய சகோதரர்கள்- தீபத்திருநாளாம் தீபாவளியைக் கொண்டாடும் இன்றைய தினத்தில், அவர்கள் அனைவரையும் வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறோம். இந்தத் தீபாவளிதினம் அவர்களுக்கு அன்புவழி மகிழ்வையும், உறவுவழி பகிர்வையும் நிறையத்தரும் தினமாக இருக்க ஆசீர்வதிக்கிறோம்.

இன, மத, நிற மொழிகளைக் கடந்து, அனைத்து மனிதர்களுக்கும் பொதுவான ஒரு பொருளாக, அனைத்து மனிதர்களையும் இணைக்கும் ஒரு பாலமாக ஒளி விளங்குகின்றது. ஒளியின் விழாவினை எல்லா சமயத்தவர்களும் - தமது சமய சம்பிரதாயங்களுக்கும், முறைகளுக்கும் ஏற்ற வகையில் கொண்டாடுகிறார்கள்.

இந்துசமய சகோதரர்கள் -தமது சமய பாரம்பரியத்திற்கேற்ப ஆண்டின் இறுதிப்பகுதியில் தீபத்திருநாளைக் கொண்டாடுவதும், அதே காலப்பகுதியில் கத்தோலிக்க மக்கள் தம் சமய பாரம்பரியத்தின்படி ஒளியின் விழாவினைக் கொண்டாடுவதும் இங்கே ஒப்புநோக்கத்தக்கது

கத்தோலிக்க மக்களும், இந்து சமய மக்களும், அருகருகே பின்னிப்பிணைந்து, நீண்டகாலமாக அன்புறவில் வாழ்ந்து வரும் எமது மண்ணில் - இது போன்ற விழாக்கள் உறவை வளர்க்கவும், புரிந்துணர்வை அதிகரிக்கவும் பெரிதும் துணைபுரிகின்றன.

கடந்த சில ஆண்டுகளாகக் கத்தோலிக்க திருச்சபையின் தலைமைப்பீடமான வத்திக்கான் நகரிலிருந்து, பிறசமயத்தவர்களின் விழாக்களின்போது வாழ்த்துக்களும், செய்திகளும் அனுப்புகின்ற ஒரு வழக்கம் இருந்து வருகின்றது. இந்த வகையில் பாப்பரசரின் சமயங்களுக்கிடையிலான உரையாடல் - சபைத் தலைவர் பேராயர் மைக்கல் ஆண்டகை, 2003 ஆம் ஆண்டு தீபாவளி பெருவிழாச் செய்தியை அனுப்பியுள்ளார். அதில் இந்துசமய சகோதரர்களும், கத்தோலிக்க சமயத்தவர்களும் மனிதமாண்பைக் கட்டியெழுப்புவதில் முன்னிற்கவேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் தமது செய்தியில் -எல்லா மனிதர்களும் உயர் நிலையான கடவுள் நம்பிக்கையைப் புதுப்பிக்கவும், உறுதிப்படுத்தவும், மற்ற மனிதர்களுடனான உறவுகளைப் புதுமெருகூட்டவும் - சமய விழாக்கள் எமக்கு அழைப்பு விடுக்கின்றன. அத்தோடு, கடவுளால் படைக்கப்பட்ட ஓவ்வொரு மனிதரினதும் மாண்பை - மீளக் கண்டுபிடிக்கவும், மதிப்புடன் மீள உறுதிப்படுத்தவும், துணிவுடன் பாதுகாக்கவும் அழைப்பு விடுக்கின்றன.

ஓவ்வொரு மனிதரினதும் மாண்பும் - எல்லோரையும் படைத்த கடவுளிடமிருந்தே பெறப்படுகின்றது. இறை நம்பிக்கையுடைய ஓவ்வொருவரது வாழ்விலும், இந்த மனித மாண்பை வளர்த்துப் பேணிப் பாதுகாக்கும் பணிமுக்கியமானது. எப்படி ஒளி - இருளை மேற்கொள்கிறது? எப்படி நன்மை - தீமையை வெற்றிகொள்கிறது? எப்படி மன்னிப்பின் மூலமாக வெறுப்பு - அன்புக்கு இடமளிக்கிறது? போன்ற சிந்தனைகள் மூலமாக இந்து சமயப் பாரம்பரியத்தில் தீபாவளி பெருவிழாவானது, சிந்தனைக்கு நல்விருந்தளிக்கிறது என்று அவர் தமது செய்தியில் தெரிவித்துள்ளார்.

எமது மண்ணின் கடந்தகால போர் அனர்த்தங்களால், மனித மாண்பு சிதைக்கப்பட்டு சின்னாபின்னமாக்கப்பட்டு வந்திருக்கின்றது. இந்த மனித மாண்பை தமிழ் மக்களாகிய நாம் ஒற்றுமையோடு கட்டியெழுப்ப, எம்மிடையே உறவுகளை வளர்த்துக் கொள்ள - தீபாவளி போன்ற விழாக்கள் பெரிதும் துணைபுரியவேண்டுமென விரும்புகின்றோம், வாழ்த்துகின்றோம். இவ்வாறு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



யாழ்.கொட்டடி வில்லூன்றி அறநெறிப் பாலர் பாடசாலையின் மெய்வல்லுனர்ப் போட்டியில் - கலாநிதி தி.மகேசன் கொடியேற்றுவதைப் படத்தில் காணலாம்.

## தீ விபத்தில் மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

எரிந்து கொண்டிருந்த விளக்கிற்கு மண்ணெண்ணெய் விடமுற்பட்டபோது, அது தவறியதால் தாயுட்பட இரு குழந்தைகள் எரிகாயத்திற்குள்ளானார்கள்.

ஆழியவளை -தாளையடியைச் சேர்ந்த பரமேஸ்வரன் பத்மினி (வயது 38), அவருடைய பிள்ளைகளான பரமேஸ்வரன் ரதீபா (வயது 8), பரமேஸ்வரன் லதீபா (வயது 03) ஆகியோரே எரி காயத்திற்குள்ளானவர்களாவர்.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் விளக்கிற்கு எணணெய் விட முற்பட்டபோது, அது தவறியதில், தாயில் பிடித்த தீ அருகில் இருந்த அவருடைய குழந்தைகளிலும் பற்றிக்கொண்டது எனத் தெரிய வருகிறது. இவர்கள் மூவரும் கிளிநொச்சி போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டனர்.

## குடாநாட்டு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றி நேற்று விரிவாக ஆராயப்பட்டது

யாழ். குடாநாட்டில் மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாக நேற்றுமுன்தினம் விரிவாக ஆராயப்பட்டது.

நேற்றுமுன்தினம் நண்பகல் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் அலுவலக விடுதியில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், அரச அதிபர் செபத்மநாதன், மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் எஸ்.பரமநாதன், மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அதிகாரி றூவன்சந்திர சேகர ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ்.குடாநாட்டிலுள்ள பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படாமையால், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக முக்கியமாக ஆராயப்பட்டது.

இதேவேளை, குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் சட்ட ஒழுங்குகள், சமூக அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்துக்கள், ஓய்வூதியப் பிரச்சினைகள், குடிநீர், வடிகால் அமைப்பு பிரச்சினைகள், தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டு வழங்குதல், மதுபான உத்தரவுப் பத்திரம் வழங்கல் போன்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக, எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள மாவட்ட அபிவிருத்திகுழுக் கூட்டத்தில் ஆராய்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

## 1970 ஆம் ஆண்டுக்கு பின் நியமனம் பெற்ற சமாதான நீதிவான்களின் திரட்டு நூல் – வெளியீடு!

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண சமாதான நீதிவான்களின் விபரம் அடங்கிய திரட்டுநூல் - எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது. 1970 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சமாதான நீதவான்களின் விபரம் அடங்கிய நூல் - நவாலி எச்.எஸ்.சி.எம்.எவ் நிறுவன பணிப்பாளரினால் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் முதலாவது பாகமே, முதல் தொகுதியாக வெளியிடப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மண் வழங்குவது தொடர்பாக உரிய முறையைப் பின்பற்றுக!

### யாழ்.நீதிவான் கிளிநொச்சி அரசஅதிபருக்கு பணிப்பு

(யாழ்ப்பாணம்)

மணல் மண் ஏற்றப்படுவது தொடர்பாக உரிய நடைமுறைகளைக் கையாளும்படி, யாழ்.நீதிவான் - கிளிநொச்சி அரச அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

பூநகரிப் பகுதியிலிருந்து மணல் ஏற்றிக்கொண்டு வந்த லொறியொன்றை, முகமாலைப் பகுதியில் வைத்து பொலிஸார் பிடித்துள்ளனர். மணல் ஏற்றிவந்தவர்களிடம் பிரதேச சபை செயலாளர் வழங்கிய அனுமதிப் பத்திரமே இருந்துள்ளது.

ஆனால், மணல் ஏற்றுவதற்குப் பிரதேசசபை செயலாளர் அனுமதி அளிக்க முடியாதெனவும், அது தொடர்பாக பிரதேச செயலர் அந்த அதிகாரத்தை - பிரதேசசபை செயலாளருக்கு கையளிப்பின், உரிய நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும் எனவும் நீதிவான் தெரிவித்தார்.

அதேவேளை - மணல் மண் கொண்டுவந்தவர்கள் உரிய நடைமுறைகளை இயன்றவரை பின்பற்றியுள்ளனர் எனத் தெரிவித்து, அவர்களிடம் 10,000 ரூபா பெறுமதியான மணலை நீதிமன்றம் ஒப்படைத்தது.

## விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப்படும்

விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப்படுமென -

கால்நடை அமைச்சின் செயலாளர் தனுசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஒருநாள் உத்தியோகபூர்வ விஜயமாக - உடுவில் கமலநல சேவைகள் நிலையத்திற்கு வருகைதந்த போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் - விவசாயக் குடும்பங்களில் படித்துவிட்டு, வேலை வாய்ப்பின்றியுள்ள பிள்ளைகளின் எதிர்கால நலன்களில் அக்கறை கொண்டு செயற்படவுள்ளோம்.

விதைநெல் மற்றும் உரவகைகள் விலை அதிகமாகவுள்ளதாக- விவசாயிகள் தெரிவித்ததையடுத்து, அது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு வேண்டிய நவீன விவசாயப் பயிற்சிநெறிகளை அளிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி நிலையத்தில், இவர்களுக்கு வேண்டிய பயிற்சிகளை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்தோடு, கிணறு வசதி இல்லாத கமநலசேவை நிலையங்களுக்கு, கிணறு அமைத்துக் கொடுக்கும் வசதிகளும் செய்துகொடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (101)

## நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் இருபத்தேழாம் திகதி யாழ். வருகின்றார்


(யாழ்ப்பாணம்)

நாடாளுமன்ற அலுவல்கள் அமைசசர் ஏ.எச்.எம்.அஸ்வர் - எதிர்வரும் 27 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகைதரவுள்ளார்.

நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சினால், யாழ். செயலகத்தில் நடத்தப்படவுள்ள கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொள்வதற்காகவே, அமைச்சர் வருகை தரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம், வன்னி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரத்தியேக செயலர்கள், உதவியாளர்கள் ஆகியோருக்கான பயிற்சிகளே இக்கருத்தரங்கில் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். வரும் அமைச்சர் - அரச அதிகாரிகள், பொதுமக்களின் பிரதிநிதிகள் ஆகியோரையும் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.




மானிப்பாய் பரிஸ் லயன்ஸ் கழகத்தில் வைத்து மாவட்ட ஆளுநர் லயன் டாக்டர் றொகான் பெரேரா பயனாளி ஒருவரிக்கு நன்கொடைப் பொருள் வழங்குவதனைப் படத்தில் காணலாம். (91)

## யுத்த நடவடிக்கையின்போது காணாமற்போன இருபதாயிரம்பேரை கண்டுபிடித்துத் தாருங்கள்

### குடும்பத்தினர் ஐ.சி.ஆர்.சியிடம் கோரிக்கை

இலங்கையில் நடைபெற்ற போரின் காரணமாக, காணாமற்போன இருபதாயிரம் பேரையும் தேடிக் கண்டுபிடித்துத் தருமாறு, அவர்களின் குடும்பத்தினர் - சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரியுள்ளனர்.

இவர்களது கோரிக்கையையடுத்து, சுமார் 11000 பேரின் வேண்டுகோள்கள் இன்னும் தீர்த்து வைக்கப்படாமல் உள்ளதாகச் செஞ்சிலுவைச் சங்கத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாடுகள் கிடைத்ததும், காணாமல் போனவர்களின் விபரங்கள், காணாமல்போன இடம் தொடர்பான விபரங்களைச் சேகரித்து - இரு சாராரின் தடுப்பு முகாம்கள், இடம் பெயர்ந்தோர் முகாம்களில் தேடுதல் நடத்துவதுடன், சம்மந்தப்பட்ட தரப்பினரிடம் பெயர்ப் பட்டியலையும் செஞ்சிலுவைச் சங்கம் வழங்கிவருகின்றது.

எனினும், சுமார் 11000 பேரின் நிலைமைகள் தொடர்பாக விபரம் கிடைக்காததால், அவர்கள் பற்றிய விபரங்களை அறிவதற்குச் செஞ்சிலுவைச் சங்கம் தொடர்ந்தும் முயற்சி எடுத்து வருகிறது. இந்த வருடம் ஜனவரி மாதம் நடைபெற்ற பேச்சு வார்த்தையின்போது, காணாமல் போனவர்களின் விபரங்களை அறிவதற்குச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை நாடுவது என்று அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் முடிவு செய்தமை குறிப்பிடத்தக்கது. (01)

# எமக்கென்று ஒரு தொழில் இருந்தால் சார்ந்து வாழவேண்டி இருக்காது

இணுவில் வீதியால் எமது பயணம் தொடர்கின்றது. இடையில், நீண்டகாலமாக சிறுகைத் தொழில் நிறுவனம் ஒன்றைத் தொழிற்பிரிப்பு முறையில் நடாத்தி வரும் வசந்தி ஞானராசாவின் இராமன்ஸ் ரவல்ஸ் இன்டஸ்ரீஸ் நிறுவனத்தை, அமைதியான காலைவேளையில் சென்றடைந் தோம். நாம் வந்த நோக்கத்தை



தெரியப்படுத்தியதுடன், எம்மையும் பற்றியதான சிறுஅறிமுகத்துடனும் எமது செவ்வியை ஆரம்பித தோம். நீண்டகாலமாக இந்த நிறுவனத்தில் கடமையாற்றும் கௌரி இலங்கநாதன், சூரியகுமாரி பொன்னுசாமி, சசிரேக்கா மருதலிங்கம் ஆகியோரது கருத்துப் பரிமாற்றலிலிருந்து, பல திறமையான செயற்பாடுகளை கேட்டறிந்தோம்.

**சிறுகைத்தொழில் சார்பான பிரவேசம் உங்களுக்கு எவ்வாறு அமைந்தது என வசந்தியிடம் கேட்டபோது,**

நான் இத்துறையில் ஈடுபடுவதற்கு, எனது கணவர்தான் காரணம். 1979 ஆம் ஆண்டு எமது நிறுவனம் - கைத்தொழில் அமைச்சில் பதிவுசெய்யப்பட்டு, எனது கணவரான ஞானராசா ஸ்ரான்லி வீதியில் தனது நண்பர் ஒருவரின் உதவியுடன் 12 தொழிலாளர் களைக்கொண்டு ஆரம்பமாகியது. எனது கணவர் அரசாங்கத்தில் கடமையாற்றுவதால், அவர் இல்லாத நேரங்களில் இக்கைத் தொழில் சார்பான சகலவிடயங்களிலும் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டுவந்தேன். காலமாற்றங்கள் காரணமாக 1998 ஆம ஆண்டிலிருந்து சுதுமலை, வடக்கு மானிப்பாய் என்ற முகவரியில் எனது நேரடிநெறிப்படுத்தலில் இக்கைத் தொழில் நிறுவனத்தை நடாத்தி வருகிறேன். என அமைதியான முறையில் பெருமையுடன்கூறினார்.

**உங்களது தொழில் முறைமையினையும், உற்பத்தி பொருட்களையும் பற்றிக் கூறமுடியுமா?**

எமது இச்சிறிய கைத்தொழில் செயற்பாடுகள், அன்றிலிருந்து இன்றுவரை தொழிற்பிரிப்பு முறையிலேயே நடைபெற்று வருகிறது. இதனால், உற்பத்தியின் வேகத்தையும், தரத்தையும் உயர்த்துவதுடன் நேர விரயத்தையும் செலவையும் குறைத்துக்கொள்ளலாம் ஒருவர் தேவையான வடிவங்களில் வெட்டிக்கொடுக்க, இன்னோருவர் அதன் பகுதிகளைப் பொருத்த, மற்றயநபர் ஒரு முடிவுப பொருளுக்கான இறுதி வேலைகளைச் செய்துமுடிக்கிறார். இவ்வாறான எமது உற்பத்தி முறையில் உருவாக்கப்படும் பொருட்களாக, மழைக்கவசம், மழைத் தொப்பி, கைப்பை, பாடசாலைப் புத்தகப்பை, பயணப்பை, பாஸ் கடவுச்சீட்டு அளவுபேஸ் மற்றும் பேஸ்வகைகள், தண்ணிப்போத் தல்கவர், இவற்றுடன் இன்னும் பல வகையானபைக்களை வடிவமைத்து வருகிறோம். யாழ்நகர முன்னணிப் பாடசாலைகளுக்கும், அரசநிறுவன ஊழியர்களுக்கும், பெருந்தொகையான, பாடசாலைப்புத்தகப்பைகளை செய்து கொடுத்துவருகிறோம்.

**உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்புக்கள் பற்றி...?**

எமது உற்பத்திச் செயற்பாட்டுக்கான மூலப்பொருட்களாக றப்பர்துணி, சிப் (ship), சாரத்துணி, button, கொழுக்கி, நூல், இவை பிரதானமாகத் தேவைப்படுகிறது. இவற்றை ஆரம்பத்திலிருந்தே, கொழும்பிலிருந்துதான் பெற்று வருகிறோம். இப்போது இவற்றை இலகுவாக இங்கு பெறமுடிந்தாலும் தொடர்ந்தும்நாம் கொழும்பிலிருந்தே தரமானவற்றை பெற்று, எமது உற்பத்தியினை மேற்கொண்டு வருகின்றோம்.

சந்தைப்படுத்தல் எனும்போது குறிப்பிட்டதொகை சேர்ந்ததும் சைக்கிளில் கொண்டுபோய் விற்பனை செய்துவருகிறோம். இதற்கு ஒருவர் நீண்டகாலமாகவே செயற்பட்டு வருகிறார். எமது பொருட்களை தனியார் கடைகள், மற்றும் நீண்டகால வாடிக்கையாளர்களும் இருக்கிறார்கள். இருந்தபோதிலும் பாதைத்திறந்த பின், தரமற்ற பொருட்கள் யாழ்.

> *ஒவ்வொரு பெண்களும் தத்தமது இயல்புகளுக்கு ஏற்றவகையான தொழிலைச் தேர்வுசெய்து விடா முயற்சியுடனும், தன்னம்பிக்கையுடனும் அதில் ஈடுபடுவார்களாயின் சார்ந்து வாழ்கின்றநிலை ஏற்பட வாய்ப்பு இருக்காது என்கிறார் - சுதுமலை ராம்சன்ஸ் ரவல்ஸ் குட்ஸ் இன்டஸ்ரீஸ் உரிமையாளர் வசந்தி ஞானராஜா.*
>
> **நேர்காணல் - காவலூர் விஜேந்திரன்**




குடாநாட்டு சந்தைகளை ஆக்கிரமித்திருக்கிறது. இவற்றின் கவர்ச்சி அதிகமேதவிர பாவனைக்காலம் குறைவாகவே உள்ளது. இவற்றோடு விலைகளும் குறைவாக உள்ளது. இன்றைய நுகர்வோர் அவசர உலகில் வாழ்கின்றவர்கள். நேரத்தைக் கவனத்திற்கொண்டு, அதேநேரம் பொருட்களின் தரத்தைக் கவனத்திற் கொளளாது அவற்றைக் கொள்வனவு செய்கிறார்கள்.

எமது பொருட்களின் தரம்கூட, அதனால், விலையும் தரத்திற்கு ஏறற மாதிரியேயுள்ளது.

இந்தக் கைத்தொழில் நிறுவனத்தில் நீண்டகாலமாகக் கடமையாற்றி வரும் சூரியகுமாரி பொன்னுசாமி கருத்துக் கூறுகையில், நான் கடந்த 5 வருடங்களாக இங்கு வேலை செய்து வருகின்றேன், எமக்கு என்று ஒரு தொழிலைத் தெரிந்து வைத்திருந்து அதனைச் செயறபடுத்தி வருவதனால், சுயமாக இயங்கக் கூடியதன்மையுடன், எமது தனிப்பட்ட தேவைகளையும் உடனுக்குடன மேற் கொள்ளக்கூடியதாகவுள்ளது. எமது உழைப்பு குடும்பத்திற்கும் பங்களிப் பாக அமைகிறது. இவற்றுடன் எதிர்காலத்திலும் நாங்கள எங்கள் காலகளில் நின்று சுயமாகச் செயற்படும் தன்மையை உருவாக்கி யுள்ளது.

அடுத்து, கடந்த இரண்டு வருடங்களாகக் கடமையாற்றும் சசிரேகா மருதலிங்கம் கருத்துத் தெரிவிக்கையில், எனக்கு ஏற்கனவே தையலில் அனுபவமும், பயிற்சியும் உண்டு. அதுவே இதனைநான் விரும்பிச் செய்யக் காரணமாக அமைகிறது. இதனோடு, எமது குடும்பத்திற்கும் என்னாலான உதவியைச் செய்ய வேண்டுமென்ற நிலையினாலும், ஒரு தொழிலை பூரணமான மன நிறைவுடன் செய்வதாலும் ஒருவித நிறைவைக் காணமுடிகிறது.

கௌரி இலங்கநாதன் கூறுகையில், நான் இங்கு ஐந்து வருடகாலமாக கடமையாற்றி வருகிறேன். ஆரம்பத்தில் ஒருவகையான ஆர்வம் [illegible]தாலும், இப்போது இல்லை. இதறகு உற்பத்தியின் வேகம் குறைவதும், முடிவுப் பொருட்களின் இறக்குமதியும் காரணமாகலாம். நான் அளவுகள் எடுத்து, வெட்டிக் கொடுத்துவிட்டுப் பின்னர், முடிவு வேலைகளைச் செய்துவருகிறேன்.


**உங்கள் கைத்தொழில் தொடர்பான எதிர்காலத் திட்டங்கள் மற்றும் தொழில் ரீதியில் நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி....?**

இனிவரும் காலங்களில் கொழும்பிலிருந்து மூலப்பொருட்களையும், முடிவுப்பொருட்களையும் கொள்வனவு செய்து, எமது உற்பத்திப் பொருட்களுடன் ஒப்பீட்டுரீதியில் விற்பனை செய்வதற்கு தீர்மானித்திருக்கிறோம். அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து, அவர்களின் பூரணஒத்துழைப்புடன் இக்கைத்தொழில் தொடர்பான பயிற்சி நெறிகளை வழங்கவுள்ளோம். இதனால், சுயதொழில் முயற்சியாளர்களை இனங்கண்டு, அவர்களின் வாழ்வுக்கு இலகுவான பாதை யமைக்கலாம் என நினைக்கிறேன்.

ஆரம்பத்தில் பெரிதாகப் பாதிப்பு எதுவும் இல்லை. ஆனால், இப்போது போக்குவரத்துச்செலவு, வரிகளின் தாக்கம் இவை பெருஞ்சுமையாக உள்ளது. இதில் எனது இன்னோர் செயற்பாடாக, பழைய பைகளையும திருத்திக் கொடுக்கிறோம். எமது இந்தச் செயற்பாடுகள் சார்பான தொழிலாளர்கள் இன்று யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்து, பல இடங்களில் தமது செயற்பாடுகளை மேற்கொள்கிறார்கள். இவர்களில் ஒரு சிலரின் தரமானசெயற்பாடுகளால், விற்பனையில் மாற்றம் ஏற்படுகிறது. இதுவும் ஒருவகையில் பிரச்சினையாகவே யுள்ளது. முன்பு மின்சாரத்தினால் இயங்கக்கூடிய தையல் இயந்திரங்களைப் பாவித்து, அதிகளவிலான உற்பத்தியினை மேறகொண்டோம். இப்போது சந்தையில் தரமற்ற போட்டிப்பொருட்களின் தாக்கத்தினால், எமது உற்பத்திச் செயற்பாடு குறைந்துள்ளது. தற்போது மின் இணைப்பற்ற இயந்திரங்களையே பாவிக்கிறோம்.

**இக்கைத்தொழில் தொடர்பாக இறுதியாகக் கூறவிரும்புவது?**

எமது கைத்தொழிலானது, தனியே பெண்கள்தான் செய்யவேண்டும் எனறு இல்லை, எம்மைப் போன்று சிறுமுயற்சிகளில் பெண்கள் ஈடுபடுவார்களாயின், தேவையற்ற பிரச்சினைகளை தவிர்ப்பதுடன், அவர்கள் சுயமாக இயங்கக்கூடியநிலை உருவாகும் பிறிதொருவரின் உதவியுடன் அல்லது வேறு ஒருவரின் கையைநம்பி வாழ்ந்துவரும் பெண்களின் (ஒரு சிலர்) நிலைமாறவேண்டும். விடா முயற்சியையும், தன்னம்பிக்கையையும் வளர்த்துக்கொள்ளவேண்டும். சுயமாகத் தனியே தொழிலை நடாத் தக்கூடிய பக்குவம் வளரவேண்டும். எமது தேவைகளையும், எம்சார்பானவர்களினதும் தேவைகளையும் முன்னின்று செயறபடுத்துவதற்கு எமக்கு என ஒரு தொழிலை தெரிவு செய்து, அதில் நாம் எமது சொந்த காலில் நிற்கவேண்டும், என்றுதான் கூற விரும்புகிறேன். அத்துடன், யாழ். பல்கலைக்கழகத்தினால் ஒவ்வொரு வருடமும் கைத்தொழில் திணைக் களமும், சிறு சிலஅமைப்புக்களும் இணைந்து முகாமைத்துவ பயிற்சியினை வழங்கிவருகிறார்கள். இதில் 2001 ஆம் ஆண்டுக்கான பயிற்சியில் நான் முதல்நிலையில் சித்தி பெற்றுள்ளேன். இப்பயிற்சி நெறியில் கலந்து கொண்டு, பயனுள்ள பல செயற்பாடுகளை உள்வாங்கி ஒவ்வொரு முயற்சிகளையும், திறமையாகவும், முன்மாதிரியாகவும் செய்ய வேண்டும். இவர்களின் இப்பணி தொடரவேண்டும் இது பாராட்டத் தக்க ஒரு செயற்பாடும் ஆகும்.




## அன்பின் சிநேகிதிக்கு



உன்னோடு நிறையவே பேசவேண்டியுள்ளதென, எனது கடந்தவார மடலை நிறைவு செய்திருந்தேன். அப்படி என்ன இவன் பேசப்போகிறானோ என - நீ உனது மண்டையைக் குடைந்துகொண்டிருப்பாய். உனது அவஸ்தையும், அவசரமும் எனக்கு நன்றாகவே புரியும். ஏனெனில், என்றும் உன்னோடு ஒன்றாய்ப் பழகியவன், பழகுபவன் அல்லவா நான்.

சென்ற செவ்வாய்க்கிழமை அம்மன் கோயிலில் உனது கணவன் - எனது நண்பன் சொரூபனைக் கண்டேன். சோகமாய் நின்றான். அருகில் சென்றேன். என் வார்த்தையை அவன் கவனியாதிருந்தான். கடவுள் சிந்தனையில் மூழ்கிவிட்டானோ எனக்கூட எண்ணினேன். அப்படியில்லை எனப்பட்டது - அவனது பார்வை சென்ற திசை.

மெதுவாகத் தோளிலே கையை வைத்தேன். திரும்பிப்பார்த்தான். பார்த்ததும் பரவசப்படுவான் என எண்ணினேன். பேசாமலே நின்றான். எனது குறுக்கு மூளைக்கு உடனேயே விளங்கிவிட்டது அவனுடைய மனதிலே ஏதோ ஒரு சோகம் இழையோடியிருப்பது.

என்ன பிரச்சினை எனக் கேட்டபோது, தான் - உனக்கு அடித்து விட்டதாகக் கூறிக் கவலைப்பட்டான். நான் எண்ணினேன் - ஒருவேளை எனது சென்ற கடிதம் கண்டு, அவனுக்கு எதிராக நீ நீதிமன்றம் சென்றுவிட்டாயோ? என, எனது சந்தேகத்தைத் தீர்த்து வைக்குமாற்போல் நடந்ததைக் கூறினான் சொரூபன்.

தற்போது கொஞ்சக் காலமாக உனதுபோக்கு மாறிவிட்டதாகவும், கோயில்கள், உறவினர் வீடுகளுக்குச் செல்வதைத் தவீர்த்து வருவதாகவும் கூறினான். எனக்குப் புரியவில்லை. கலகலவெனப் பழகும் கமலாவா இவற்றைத் தவிர்க்கிறாள். என்ன காரணம் எனத் திரும்பக் கேட்டேன்.

எல்லாவற்றிற்கும் இந்தக் கோதாரி ரீ.விதான் காரணம் எனச் சலித்துக் கொண்டான் உன் கணவன். நானோ ஏதும் புரியாமல் நின்றேன். அவனே தொடர்ந்தான்.

இந்த ரீ.வித் தொடர்களால், எங்கள் குடும்ப மகிழ்ச்சியே குழம்பிக் போய்விட்டது. மூன்று மணிக்கு நான் பள்ளிக்கூடத்தால் வேலைக் களைப்பில் வரும்போது, கமலா ரீ.விக்கு முன்னாலிருந்து தெய்வத்தைப் பார்ப்பதுபோல, அதைப் பார்த்துக் கொண்டிருப்பாள்.

எனக்குச் சாப்பாடும் ஏற்கனவே போட்டு, மூடிவைத்திருக்கும். சிலவேளைகளில் விளம்பர இடைவெளிகளுக்கு வந்து போவாள். என் விதியை நொந்துகொண்டு, சாப்பிட்டுவிட்டு எழும்புவேன்.

மூன்று மணிக்கு ரீ.விக்கு முன்னால் இருந்தால், ஏழரை மணிக்குதான் எழும்புவாள். பின் ஒரு மணித்தியால இடைவெளியில் வீட்டு வேலைகளைச் செய்வாள். இரவுச் சாப்பாடும் மத்தியானத்தோடு சேர்த்து செய்துவிடுவாள் அல்லது சுகமாக ஒரு றாத்தல் பாணோடு முடியும்.

ஏழு மணிக்குத் திரும்பி ரீ.விக்கு முன்னால் அமர்ந்தால், ஒன்பது மணிக்குத் தான் எழும்புவாள். அதற்கிடையில் நான் தூங்கிவிடுவேன். பிறகு விடிந்தால் வேலை. பின்னரும் இதே அட்டவணைதானே எனத் தலையில் அடிக்காத குறையாகப் பேசிமுடித்தான்.

எனக்கு இப்போது ஓரளவு விளங்கிவிட்டது, அவன் ஏன் உனக்கு அடித்தான் என. 'பெண்ணுரிமை' பார்ப்பதற்கு எனக்கு உரிமை இல்லையா? எனக் கேட்டிருப்பாய். தொடுவானம், உறவுகள் ஒரு தொடர்கதை பார்க்க உறவுகள் ஒரு தடையா? என உரத்துக் கத்தியிருப்பாய். வைதேகி பார்க்கவிட வில்லையென அவனைத் திட்டியிருப்பாய். அத்தை, சித்தி பார்ப்பதற்கு அவர்களே தடையாக இல்லாதபோது, நீங்கள் ஏன் தடுக்கிறீர்கள் என எதிர்த்திருப்பாய். அவன் அடித்திருப்பான். அதுதான் நடந்திருக்கிறது என ஊகித்துக்கொண்டேன். எனது ஊகத்தை சொரூபன் உறுதிப்படுத்தினான்.

இது தொடர்பாக என்னை உன்னோடு பேசும்படி வேண்டிக்கொண்டான். இந்த விடயத்தில் ஆண்டவனால்கூட முடியாதநிலைக்கு எமது சிநேகிதிகள் பலர் சென்றுவிட்டார்கள் என நான் திருப்பிச்சொன்னேன்.

உங்கள் மணவாழ்வின் ஆரம்பத்தில் - உங்கள் இருவரின் ஒற்றுமையைப் பார்த்து ஊரே பாராட்டியது. இந்த ஒற்றுமை போயும் போயும் ஒரு சாதாரண ரீ.வித் தொடர்கள் முறிந்துபோவதா? அதற்கு ஒருபோதும் நீ இடமளிக்கக்கூடாது. தங்கள் பொருட்களின் விளம்பரங்களை எமக்குப் போட்டுக் காட்டவும், பொன்னான எமது நேரத்தைக் கொள்ளையடிக்கவுமே இந்தத் ரீ.வித் தொடர்களால் முடிகிறது. ஏதாவது ஒரு சிந்தனை மிக்க பயனாக விடயங்களை உனக்குச் சொல்லித்தந்திருக்கிறதா?


சொந்தங்களுக்கிடையிலான சொத்துச் சண்டைகளையே, அநேகமான கதைகள் மையப்பொருளாக்கி - உன் அடி மனதிலும் அத்தகைய ஒரு தீய விதையை விதைத்துவிடும். எனவே, நீ அதற்கு அடிமையாகிவிடாதே. என்னைவிட நீ அறிவிலே உயர்ந்து நிற்பதை சிலவேளைகளில் நானே பாராட்டியிருக்கின்றேன். எனவே, இந்த விடயம் தொடர்பாக நீ சிந்தித்துச் செயற்படுவாயென எனக்குத் தெரியும். எனது போதனைகள் உனக்குத் தேவையில்லை. ஆனாலும், எனது கடமைக்காக அடுத்த வாரம் அதைக் கூறவேண்டியுள்ளது. அதற்கிடையில் நீ தெளிவுபெற்றுவிடுவாய் எனும், நம்பிக்கையோடு நிறைவுசெய்கிறேன்.

அன்பின்
சிநேகிதன்.

## பொன் மொழிகள்

- பணத்துக்காகத் திருமணம் செய்து கொள்ளாதே. பணத்தை இலகுவாகக் கடன் வாங்கிக்கொள்ளமுடியும்.
- உண்மையாய் நடக்கும் மனைவியைச் சந்தேகிக்கின்றவன் அவளைப் பொய்யாய்நடக்கும்படி செய்துவிடுகிறான்.
- எல்லோருடைய இடத்தையும் தாய் வகிக்கமுடியும். ஆனால், தாயின் இடத்தை யாராலும் வகிக்கமுடியாது.
- அப்பா ஆயிரம் நண்பர்களுக்குச் சமன், அம்மா ஆயிரம் அப்பாக்களுக்குச் சமன்.

# பால்ரீதியாகப் பெண்களை ஒருபோதும் ஒதுக்கிவிட முடியாது



**அண்மையில் இலங்கை சட்ட உதவி மன்றத்தினால் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக, சட்ட ஆலோசனைகள் எனும் விடயம் சம்பந்தமாக - யாழ். பல்கலைக்கழகத்தில் கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டது. அதிலே கருத்துரை வழங்கிய அரச சட்டத்தரணி சுகந்தி கந்தசாமியினுடைய கருத்துகளிலிருந்து தொகுக்கப்பட்ட விடயங்கள் இப்பகுதியில் பிரசுரமாகின்றது.....**

(சென்றவாரத் தொடர்ச்சி)

இதன்மூலம் இலங்கை மகளிர்களுக்கு உள்ள பிரச்சினையை அடையாளப்படுத்தி, அவை தொடர்பான சட்டங்கள் உருவாக்கப்படுவதற்கு, நாடாளுமன்ற சட்டவாக்கற்துறையே நிர்ப்பந்திக்கமுடியும்.

இந்த அழுத்தத்தின் காரணமாக 1995 ஆம ஆண்டு சட்டத்தில பெண்கள் தொடர்பான ஒரு திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்த திருத்தச்சட்டம்தான் ஓரளவிற்கேனும் பெண்களின் உரிமைகள் தொடர்பான பிரச்சினைக்கு உயிர் கொடுத்தது என்றுகூறமுடியும். இந்தப் பட்டயத்தின்கீழே பெண்களுக்காக தேசிய அதிகாரசபை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அதாவது, இந்தப் பட்டயத்தை முறையான முறையிலே செயற்படுத்தவேண்டும் என்பதற்காகவே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இதன்கீழ் சட்ட அலகு ஒன்று செயற்படுகின்றது. இதனுடைய பெயர் - பாலியல் ரீதியான முறைப்பாடுகளை தெரிவிக்கும் நிலையம். இந்த நிலையத்திலே பாதிக்கப்பட்டவர்கள் சென்று, தமது முறைப்பாடுகளை தெரிவிக்கலாம். ஆனால், இங்கு பாதிக்கப்படுபவர்கள் சென்று முறைப்பாடு செய்வது என்பது மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. 1999 ஆம் ஆண்டு தரவுகளின்படி - 33 பாலியல் முறைப்பாடுகளே இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், ஏராளமான பாலியல் சம்பவங்கள் நடைபெற்றிருக்கலாம். இவை வெளியே கொண்டுவரப்படவில்லை. இது விரும்பத்தக்கது அல்ல.

இதற்குக் காரணம் மிகக்குறைவான மக்களே சட்டத்துறையையும், நீதித்துறைகளையும் நாடவேண்டும் எனும் எண்ணத்தைக் கொண்டுள்ளமையே ஆகும்.

இந்த நிலைமையானது - குற்றச் செயல்கள் தொடர்பான அறிக்கைகளை அவ்வப்போது வெளியிடும். அதிலே குற்றங்கள் எவ்வாறு நடைபெறுகின்றன என்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும். இதன் மூலம் மக்களுக்கு ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதோடு, அரசிற்கும் ஒரு அழுத்தத்தைக் கொடுக்கமுடியும்.

இதைவிட இன்னொரு அதிகார சபை உள்ளது. அது சகலவிதமான பாலியல் துஷ்பிரயோகங்களையும் ஒழிப்பது தொடர்பான நடவடிக்கைகளை எடுக்கும். அந்த அமைப்பிலே 19 சிபார்சுகள் உள்ளன. இவற்றிலே முக்கியமானவை பாலியல் துஷபிரயோகங்களை தடுத்தலும், பாலியல் ரீதியான துன்புறுத்தல்களைத் தடுத்தலும் ஆகும்.

இவற்றோடு சித்திரவதைக்கு எதிரான பிரகடனம் ஒன்றும் காணப்படுகிறது. இது தொடர்பாக இலங்கையினுடைய அரசியல் யாப்பின் 11 ஆவது சரத்திலும், எந்தவொரு மனிதனும் மனிதாபிமானம் அற்ற முறையிலே சித்திரவதைக்கு உட்படுத்துபடக்கூடாது எனவும், அவற்றிலிருந்து அவர் பாதுகாப்பு பெறுவதற்குமான வழிமுறைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த சித்திரவதைக்கு எதிரான விடயம் தொடர்பாகவுள்ள சர்வதேச பிரகடனத்தையும் இலங்கை ஏற்றுக்கொண்டுள்ளது. சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டவர்கள் இலங்கையினுடைய பொதுச் சட்டத்தினூடாகவும் வழக்கு தாக்கல்களில் ஈடுபடலாம் அல்லது போனால், இந்த சித்திரவதைக்கு எதிரான சட்டத்தினூடாகவும் வழக்கு நடவடிக்கைகளில் ஈடுபடமுடியும்.

சட்டத்துறையைப் பொறுத்தவரையிலே ஒரு நடைமுறை இருக்கிறது. அதாவது, ஏதாவது ஒரு கட்டம் அமுலுக்கு வந்தால், அதற்கு நீதிபதியொருவர் பொருள்கூறவேண்டும். இச் செயற்பாடு 'பொருள் கோடல்' எனப்படும். இதன மூலமாகவே அந்த சட்டவாக்கம் உயிர் பெறுகிறது.

இன்று இலங்கையிலுள்ள உயர் நீதிமன்றங்கள் தொடக்கம் நீதிவான் நீதிமன்றம் வரையான, அனைத்து நீதித்துறைசார்ந்த அமைப்புக்களும் - பாலியல் துன்புறுத்தல்கள், குற்றச்செயல்கள் தொடர்பான விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதை நாம் காணக்கூடியதாகவுள்ளது.

இதனால், இத்துறை சார்ந்த சட்டங்களுக்கு - நீதிவான்கள் பொருள் கொடுக்கும் போது மிகவும் துல்லியமாகவும், எல்லாத் தரப்பினரையும் அடக்கக்கூடிய, அவர்களுக்குப் பொருந்தகூடிய விதத்திலே பொருள உரைக்கின்றனர். இதனால், அநேகமான குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பித்துக் கொளளமுடியாததொரு சூழ்நிலை ஏற்றபட்டுள்ளது.

பாலியல் ரீதியான துன்புறுத்தலுக்கு உள்ளாகும் பெண்களுக்கு உத்தரவாதப்படுத்தக் கூடிய உரிமைகள் வழங்கப்படுவதில்லை. எனினும், குற்றச்சாட்டுத் தொடர்பான தப்பபிப்பிராயம் பொதுவாக எமது சமூகத்தில் நிலவுகிறது.

ஆனால், இத்தகையதொரு குற்றவியல் விடயம் நீதிமன்றத்திற்கு வருகிறபோது - நீதபதியும், அவர் சார்நத நீதிமன்ற சமூகமும் தம்மால் இயன்றவரை பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு உதவி வழங்குகின்றனர். குறித்த பெண்ணினுடைய தனித்தன்மையும், கௌரவமும் பாதிக்கப்படாத வகையிலே அவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கினறனர்.

அந்த பெண்ணுடைய முன்னேற்றத்திற்கும் பல வழிகளில் உதவுகிறார்கள். பொதுவாகப் பாலியல்ரீதியான வழக்குகள் - நீதிமன்றங்களுக்கு வரும் ஏனைய வழக்குகளைவிட, அநத வழக்குகளுக்கு முன்னுரிமை கொடுத்து, விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும். அவ்வாறுதான் நீதிமன்றமும் செயற்படும்.

காரணம் பாலியற்குற்றச்சாட்டு தொடர்பான வழக்குகள் நீண்டகாலத்திற்கு இழுத்தடிக்கப்படும்போது, குற்றவாளிகள் தப்பிச் செல்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டுவிடும். இதனை தவிர்ப்பதற்காகவே இந்த வழக்கு விசாரணைகள் துரிதகதியிலே நடைபெறவேண்டும் எனக் கூறப்படுகின்றது.

பாலியற்குற்றச்சாட்டில் தொடர்புடைய குற்றவாளிகளையோ அல்லது சந்தேகநபர்களையோ பிணையில் வெளியே எடுப்பதற்குப் பொதுவாக அனுமதி மறுக்கப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் பிணை அனுமதி வழங்கப்படும்போது, மிகக்கடுமையான நிபந்தனைகளின் பேரிலேயே அவர்கள் பிணையில் விடுவிக்கப்படுகிறார்கள். பாதிக்கப்பட்ட பெண்ணொருவர் நீதிமன்றத்திற்குவந்து, தனது வாக்குமூலங்களை அளிக்கும்போது, அதில் குறிப்பிடப்படும் விடயங்கள் மிகவும் இரகசியமானமுறையிலே பேணப்பட வேண்டும். இது அவர்களுடைய அடிப்படை மனித உரிமையும்கூட.

குறித்த பெண் எவ்வாறு பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டாள் என்பது தொடர்பான விசாரணைகள் மூடிய நீதி மன்றங்களினுள்ளேயே நடாத்தப்படவேண்டும். சான்றுப் பொருட்கள் கூட, அத்தகையதொரு நீதிமன்றத்திலேயே சாட்சிப்படுத்தப்படல் வேண்டும். இந்த வழக்குகள் தொடர்பான செய்திகள் - ஊடகங்கள் மூலமாகப் பகிரங்கமாக வெளிபடுத்தப்படக்கூடாது. பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட பெண்ணை எதிர்தரப்பு வக்கீல்கள் குறுக்கு விசாரணை செய்கின்றபோது, அவளுடைய குற்றங்களைக் கொச்சைப்படுத்தும் விதத்திலான கேள்விகள், ஆபாசமான கேள்விகள் எதையும் கேட்பதற்கு நீதிமன்றங்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டாது.

இவ்வாறான கணிசமான பாதுகாப்பு நீதிமன்ற சட்டங்களிலே பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு வழங்கப்படுகிறது. எனவே, பாதிப்புக்குள்ளான பெண்கள் எதுவித அச்சமுமின்றி, நீதிமன்றங்களை அணுக முடியும். பாலியல்ரீதியான குற்றங்கள் என எவற்றைப் பட்டியலிடுகிறார்கள் எனப் பார்த்தால், முதலாவது குற்றமாக பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தல் அல்லது கற்பழித்தலை குறிப்பிடமுடியும். எமது தண்டனைச் சட்டக்கோவையில் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படக்கூடிய பாரியதொரு குற்றமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தொகுப்பு ~ இ.சர்வேஸ்** (தொடரும்...)

# தாய்ப்பால் முதல் முதலுதவி வரை



குழந்தைக்கு ஆறு வயதாகும்போது, அதன் தற்காலிகப் பற்கள் விழத்தொடங்குகின்றன. இதன் பின் நிரந்தரப் பற்கள் உருவாகின்றன. அதற்குப் பிறகு பற்கள் முளைப்பதற்கு இயற்கை ஒரு கணக்கு வைத்திருக்கிறது. ஆறு அல்லது ஏழு வயதிலிருந்து, வருடத்திற்கு நான்கு பற்கள் முளைக்கின்றன. இப்படித் தொடர்ந்து ஐந்து வருடங்களுக்குப் புதுப் பற்கள் முளைத்துக் கொண்டிருக்கின்றன.

குழந்தைக்கு இந்தக் காலகட்டத்தில் மறக்காமல் நாம் கவனத்தில் கொள்ளவேண்டிவிடயம் - குழந்தையின் பற்களையும், வாயின் பிறபகுதிகளையும் மிகவும் சுத்தமாக வைத்திருக்கவேண்டியது ஆகும்.

நிரந்தரப் பற்கள் முளைக்கும் காலகட்டத்தில் தான், குழந்தை தொண்டைக் கழலை, பீனிசம், காதுவலி போன்ற வருத்தங்கள் உண்டாகும் வாய்ப்பும் அதிகம். உப்பு நீரினால் வாயைக் கொப்பளித்து வெளியேற்றுவது - வாய்ப்பகுதிக்கும், தொண்டைக்கும் மிகவும் நல்லது. இந்தப் பழக்கத்தை குழந்தைக்கு ஆறு, ஏழு வயதாகும்போதே அறிமுகப்படுத்திவிடுவது நல்லது.

சில குழந்தைகளுக்குப் பிறக்கும்போதே பல் இருக்கும். பொதுவாக ஆறு மாதம் ஆகும்போது, கீழ்வரிசையின் முன்பக்கத்தில், இரண்டு அரிசிப்பற்கள் முளைக்கும். அதற்குப் பிறகு மேல் வரிசையின் முன்பக்கத்தில் இரண்டு பற்கள் முளைக்கும்.

ஆறு, ஏழு மாதங்களாகியும் குழந்தைக்குப் பல் முளைக்கவில்லை என்றால், பதற்றப்படவேண்டாம். பல் முளைப்பதற்காக 1 வருடம் காத்திருந்துவிட்டு, பின்னர் மருத்துவ ஆலோசன்னை பெறலாம். நெல்லால் ஈறுப் பகுதியைக் கீறினால், பல் முளைக்கும் என்பதற்கெல்லாம் எந்த விஞ்ஞான ஆதாரமுமில்லை. பொதுவாகக் குழந்தைக்கு ஐந்து வயதாகும்போது, அதற்கு இருபது பற்கள் இருக்கவேண்டும்.பல் முளைப்பதனாலே வயிற்றுப் போக்கு உண்டாவதில்லை. பல் அப்போது ஊறுவதனால், கையில் கிடைத்ததை எல்லாம் குழந்தை வாயில்போட்டுக் கொள்கிறது. அது வேண்டுமானால் வயிறறுப்போக்குக் வழிவகுக்கலாம்.

கிட்டத்தட்ட பல் முளைக்கும் காலகட்டத்தில்தான், குழந்தையின் பல்வேறு நடவடிக்கைகளும்கூடவே நடைபெறத் தொடங்குகின்றன. குப்புறப்படுத்துக்கொள்வது தாய்ப்பாலோடு வேறு திரவ உணவும் அளிக்கப்படுவது, இப்படிப்பட்டகாரணங்களாலும் வயிற்றுப்போக்கு ஏற்படலாம். என்றாலும், எல்லாப் பழிகளுமே முளைக்கும் பற்களின் மீதே விழுகின்றன. பல் முளைக்கும் காலத்தில் - வயிற்றுப்போக்கு ஏற்பட்டால், அரிசிக்கஞ்சியும், நெஸ்ரமும் கலந்து கொடுக்கலாம்.

# மருத்துவ ஆலோசனை

**பெண் நோயியல் தொடர்பாக, எமது வாசகர்கள் அனுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்துள்ளார்கள் பெண் நோயியல் வைத்திய நிபுணர் - Dr.G.பவானி மற்றும் Dr.A.கெனத் ஆகியோர்.**

**எனக்கு இரண்டு குழந்தைகள். 2 ஆவது பெண் குழந்தை பிறந்த 2 ஆம் நாள், அதற்கு லேசான வெள்ளைபடுதல் இருப்பதை அவதானித்தேன். இது ஏதாவது நோயின் அறிகுறியா?**

பெண் குழந்தைகளில் பிறந்த சில தினங்களுக்கு இவ்வாறிருப்பது ஒரு சாதாரண நிகழ்வாகும். குழந்தையானது தாயின் கருப்பையினுள் வளரும்போது, அது தாயின் குருதியில் அதிகளவில் காணப்படும் ஈஸ்ரோஜன் என்னும் ஓமோனை அதிகளவில் பெற்றுக்கொள்கின்றது. இந்த ஓமோனின் விளைவாகத்தான் பெண்குழந்தைகளில் வெள்ளைபடுதல் ஏற்படுகின்றது. குழந்தை பிறந்து சில நாட்களில் ஈஸ்ரோஜனின் அளவு குழந்தையில் குறைந்து செல்ல - வெள்ளைபடுதலும் மறைந்துவிடும்.

**ஒரு பெண் பிரசவத்தின் பின்னர் குறிப்பிட்ட சில நாட்களுக்கு நீர் அருந்தக்கூடாது எனற ஒரு சமுதாய வழக்கம் இருந்து வருகின்றது. இது சரியா?**

பிரசவத்தின் பின்னர் போதியளவு நீர் அருந்தவேண்டும் என்பதே சரியானது. ஏனெனில், கர்ப்பிணிகளில் குருதியுறையும் தன்மை பலமடங்கு அதிகரிக்கின்றது. இந்நிலையில், பிரசவத்தின் பின் போதியளவு நீர் அருந்தாதவிடத்து, உடலில் நீரிழப்பு ஏற்பட்டு, நாளங்களில் குருதியுறைதல் ஏற்பட இடமுண்டு.

இது மூளை நாளங்களில் ஏற்படுமாயின், மிகவும் அபாயமானது. போதிய நீரை அருந்துவதன்மூலம் சிறுநீரில் ஏற்படும் தொற்றுக்களைத் தவிர்க்கலாம்.

**மாதவிலக்கின்போது தாம்பத்ய உறவில் ஈடுபடுதல் ஏதேனும் பாதிப்பை ஏற்படுத்துமா?**

பொதுவாக எந்தப் பாதிப்பும் ஏற்படுவதில்லை. இதன்மூலம் கருத்தரித்தலையும் தவிர்க்கமுடியும்.

**எனக்கு வயது 20. மாதவிலக்குக் காலங்களில் தாங்கமுடியாத வலி ஏற்படுகின்றது. ஆறு வருடங்களாக பனடோல் பாவித்து வருகின்றேன். பனடோல் பாவிப்பதனால் வேறு விளைவுகள் ஏற்படுமா?**

மாதவிலக்கின்போது ஏற்படும் வலிக்கு ஆரம்பகட்ட சிகிச்சை வலி நிவாரணிகளை உபயோகிப்பதுதான். இதில் பனடோல் பக்க விளைவுகள் அற்றது. ஆனால், பனடோலிற்கு வலி குறையாவிடில் வைத்திய உதவியை நாடவும்.

**பெண்நோயியல் சம்பந்தமான பிரச்சினைகள், சந்தேகங்களைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைத்தால், அதற்கான மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படும்.**

சிநேகிதியே

"நமது ஈழநாடு"

267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

பல்லார் முனியப் பயன்இல சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்.

-திருக்குறள்.

## நமது நோக்கு

# வெற்றுச் சவால்கள் சமாதானத்தின் எதிரிகள்!

சமாதானம் தொடர்பாகவும், அரசியல் தீர்வு குறித்தும் பேசிக்கொண்டே யுத்தத்திற்குரிய தயார்படுத்தல்களில் முனைப்பு காட்டுவதும், படைத்தரப்பை என்றுமில்லாத அளவிற்கு சர்வதேச அனுசரணையுடன் பலப்படுத்தி யுத்த சன்னதர் ஆக்குவதில் தீவிர அக்கறை காட்டுவது ஸ்ரீலங்கா அரசின் இயல்பு என்பது, சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

கடந்த காலங்களில் சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்ற வேளையில் எல்லாம் அவ்வப்போது ஆட்சியில் அமர்ந்திருந்த ஸ்ரீலங்கா அரசுகள் இந்தவகையிலான இரட்டைநோக்கு இராஜதந்திர மூலோபாயத்தையே தமது அரசியல் நகர்வுகளின் போது, கையாண்டு வந்துள்ளமை தான் வரலாறு.

இந்த அனுபவங்களின் தாக்கங்களைத் தமிழர்கள் பல தசாப்தங்களாக நன்கு அனுபவித்தே வந்துள்ளனர். இந்த அனுபவஞானம் தமிழ் மக்களை, அரசின் சமாதான அணுகு முறைகள் குறித்து எப்போதும் நம்பிக்கையற்ற நம்பிக்கைகளையே கொள்ளவைத்துள்ளது.

போர்த்தயார்படுத்தலில் கவன ஈர்ப்பைக் கொண்டிருக்கும் ஓர் அரசு சமாதான நகர்வுகளின் முழுமையான விசுவாசத்துடன் ஈடுபடும் என எவரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

இன்று, ஸ்ரீலங்கா அரசின் சமாதான முயற்சிகள் மீதான அரச விசுவாசத்தை இந்த அடிப்படையில்தான், கருத்தில் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பது துரதிஷ்டமே ஆகும்.

அரசாங்கம் சமாதானம் தொடர்பான எத்தகைய நிலைப்பாட்டினை தெளிவாகவும் உறுதியாகவும் கொண்டுள்ளது. என்பதைக் கூறுவது சாத்தியமற்ற ஒன்றேயாகும்.

பிரதமர் ரணில், அடுத்து நகரப்போகும் பேச்சுக்கள் கடினமானவைகளாகவே இருக்கும் என்கிறார்.

அடுத்த சமாதான பேச்சுக்கள் மிக விரைவில் நடக்கும் எனவும், அவை சுமுகமாகவும், இயல்பாகவும் இருக்குமெனவும் நம்பிக்கையுணர்வுடன் அமைச்சர் பீரிஸ் கருத்து வெளியிடுகிறார்.

ஆனால், சிறிலங்காவின் வெளியுறவு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவோ, டில்லியில் இருந்து கொழும்பு திரும்பும் வழியில் சென்னையில் அளித்த பேட்டியொன்றில் சமாதான முயற்சிகள் முறிவடைந்தால், புலிகளிடம் இருந்து தோன்றக்கூடிய எந்தவொரு யுத்தச் சவாலையும் எதிர்நோக்க அரசு தயார் என சவால்விடும் தொனியில் தனது பேரினவாத பண்பாட்டுக் கருத்தினை வெளியிட்டுள்ளார்.

இதற்கு அப்பால் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும் சமாதான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்றாலும் பாதுகாப்புப் படையினர் எப்போதும் தயார்நிலையில் இருக்கவேண்டுமெனவும், அவர்களைப் பலப்படுத்தும் முயற்சிகள் தொடரப்படும் என்றும் கூறியுள்ளார்.

இவையனைத்தும் அரசின் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான முரண்நிலையை தெளிவு படுத்துபவையாகவே உள்ளன. இதேவேளை டிரோன் பெர்னாண்டோ புலிகள் போருக்கான ஆயத்தங்களில் ஈடுபடுகின்றனர். தமது உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிக அளவில் அதிகரித்துள்ளனர்.... எனவே, நாம் போருக்குத்தயாராக இல்லை எனில் மக்கள் எம்மை மன்னிக்கமாட்டார்கள்.... எனவே, நாம் அதற்கும் ஆயத்தமாகவே இருக்கிறோம். என தனது பேட்டியில் கூறப்பட்ட கருத்துக்களுக்கு நியாயம் கற்பிக்கும் கற்பிதவார்த்தைகளையும் கூறியுள்ளார்.

இது அமைச்சரின் தவறான, சிங்கள மக்களிடையே விடுதலைப்புலிகளின் சமாதானப் ஈடுபாட்டை கொச்சைப் படுத்தும் ஜே.வி.பி மற்றும் சிஹல உறுமயத்தனமான கருத்தேயாகும்.

இதுவரை இம்மாதிரியான கருத்துக்கள் எதனையும் அரசின் சமாதான நகர்வுகளைக் கொச்சைப்படுத்தும் வகையில் விடுதலைப்புலிகள் கூறவில்லை என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

புரிந்துணர்வு உடன்பாட்டை முழுமையாக ஒப்புக் கொண்ட பிரகாரம் அரசு நடைமுறைப்படுத்தாத போதும்....


தொடர்ந்தும் தமிழ்மக்களுக்கெதிரான புலிகளுக்கெதிரான, படைத்தரப்பு அழுத்தங்களும், அச்சுறுத்தல்களும் நடைபெற்று வருகின்றபோதிலும்...

தமிழ்மக்களின் இயல்பு வாழ்வுக்கான பாதுகாப்பை, வாழ்வியல் உரிமைகளை அரசால் இன்னமும், இந்தச் சமாதான சூழ்நிலையிலும், வழங்கமுடியாதுள்ள போதிலும்....

புலிகள் அமைதிகாக்கிறார்கள்... சமாதானத்தை, போர்நிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு உடன்பாட்டினை மதித்து தொடர்ந்து பாதுகாத்து வருகிறார்கள். ஒரு உறுதியான, நியாயமான, அரசியல் தீர்வுக்கான மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறார்கள்.

இதனை அரசு புரிந்து கொள்ளவேண்டியது அவசியம். சவால்கள் சமாதானத்தினைப் பாதுகாக்காது, ஆபத்தில் தள்ளிவிடும் என்பதையும் அரசு உணர்ந்து கொள்ள வேண்டும்.

## நாடும் நடப்பும்




# இந்திய மீனவர்களின் அத்துமீறலால் 7500 மீனவக் குடும்பங்கள் பாதிப்பு!

(கொழும்பு)

இந்திய மீனவர்கள் - இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடிக்கும் நடவடிக்கையால், ஏழாயிரத்து ஐந்நூறு மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய மீனவர்கள் - இலங்கைக் கடற்பரப்பில் அத்து மீறும் நடவடிக்கைகள், கடந்த ஒரு மாதத்தில் குறைவாக இடம்பெற்றபோதிலும், கடந்த 11 ஆம் திகதியில் இருந்து, அதிகரித்து வருவதாகவும், கூறப்படுகின்றது.

திங்கள், புதன், சனி ஆகிய தினங்களில் சுமார் ஆயிரத்து ஐந்நூறு இழுவைப் படகுகளில், இந்திய மீனவர்கள் - இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து, இலங்கைக் கடல் வளத்தை அள்ளிச்செல்கிறார்கள். இவ்வாறு இந்திய மீனவர்களால் அள் ளிச் செல்லப்படுகின்ற மீன்களின் பெறுமதி- 25 ஆயிரம் ரூபா எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்களின் இந்த நடவடிக்கையால் - 10 கோடி ரூபா அளவில் நட்டம் ஏற்பட்டுள்ளதாக, மன்னார் மாவட்ட மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தமிழ் நாட்டு மீனவர்கள் அப்பகுதிக் கடற்பகுதியில் மீன் பிடிப்பதற்கும், அங்கு தமது தொழிலை நடாத்துவதற்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளமையால், இலங்கையில் - இந்திய மீனவர்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கு எவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளார்களென, மன்னார் மாவட்ட மீனவத் தொழிலாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.(01)

# மக்களின் ஆதரவை திரட்டுவதே இடதுசாரியின் இன்றைய கடமை

## தினேஸ் குனவர்த்தன கூறினார்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட, இடதுசாரிக் கட்சிகள் ஊடாக மக்களின் ஆதரவை அதிகரிப்பதே, இடதுசாரிகளின் இன்றைய கடமையாகக் கருதவேண்டும் என்று மக்கள் ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது.

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவரும், பொதுஜன ஐக்கியமுன்னணி நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஸ் குணவர்த்தன - பத்தரமுல்லயில் நடந்த கட்சிக் கூட்டம் ஒன்றில உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது-

அரசாங்கத்தின் பல்தேசியப் பொருளாதாரக் கொள்கைக்கு எதிராகப் பலமான தாக்குதலைத் தொடுக்க இடது சாரிகள் ஒன்றுபடவேண்டும்.

24 வெளிநாட்டு வங்கிகளுடன் போட்டியிட்டு, அதேவருடத்தில் 2 பில்லியன் ரூபாயை மக்கள் வங்கி வருமானமாகப் பெற்றிருக்கிறது.

ஆனால், மக்கள் வங்கியை அடுத்த வருடம் தனியார் மயமாக்க அரசாங்கம் முயற்சிக்கிறது என்று மேலும் அவர் தெரிவித்தார்.

# நாடாளுமன்ற நிலையியற் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டுவர வேண்டும்

## அமைச்சர் லொக்கு பண்டார கூறுகிறார்

(கொழும்பு)

நாடாளுமன்றத்திலுள்ள நிலையியற் கட்டளைச் சட்டத்தில் மாற்றம் கொண்டுவரப்படவேண்டும் என்று, சபை முதல்வர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கட்சிகளின் சார்பில் உரையாற்றுகின்ற சந்தர்ப்பம் கட்சித் தலைவர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது. இந்த வழமைக்கு மாறாக ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச சமரசிங்க இருக்கும்போது, விமல் வீரவன்ச தலைவர்கள் நேரத்தில் உரையாற்றினார். அவர் உரை யாற்றுவதற்குச் சபையின் முதல்வர் லொக்கு பண்டார அனுமதி மறுத்துள்ளார். இதேவேளை சமசமாசக் கட்சியின் சார்பில் அதன்தலைவர் உரையாற்றவேண்டிய இடத்திற்குப் பதிலாக, வத்தேச சமிந்த தேரர் தலைவர் நேரத்தில் உரையாற்றியுள்ளார். இதற்கு சபை முதல்வரும் அனுமதி அளித்துள்ளார்.

சபை முதல்வரின் இவ்வாறான நடவடிக்கைகளை கண்டிக்கும் கருத்துக்கள் சபையில் கூறப்பட்டுள்ளன. இவற்றிற்குப் பதிலளிக்கும்போதே, சபை முதல்வர் இவ்வாறு தெரிவித்தார்.

கட்சித்தலைமைகள் உறுதியான முடிவுகளை எடுக்கும் பட்சத்தில், இவ்வாறான சிக்கல்கள் தோன்றுவதற்கு வாய்ப்புகள் இல்லாமல்போகும். இதற்கு அமைவாக நிலையியல் கட்டளைச் சட்டத்தில், மாற்றம் கொண்டு வரப்படவேண்டும் என்றும் அவை முதல்வர் தெரிவித்துள்ளார். (1)

# நாட்டை கட்டியெழுப்பும் தேசியதிட்டத்தை ஜே.வி.பியினர் ஆரம்பித்து வைத்தனர்!

(கொழும்பு)

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டம் ஒன்றில் இணைந்து கொள்ளுமாறு ஜே.வி.பி அழைப்பு விடுத்துள்ளது.

கொழும்பு விகாரமாதேவி விகாரையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ஜே.வி.பி பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இந்த அழைப்பை விடுத்தார்.

இந்தக் கூட்டத்தில் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள், பௌத்த பிக்குகள் மற்றும் ஆயிரக்கணக்கான ஜே.வி.பியினரும் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய ஜே.வி.பி.பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய நிகழ்ச்சித் திடடத்தினை கட்சி நாட்டுக்குச்சமர்ப்பிக்கிறது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திடம் இருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கே இந்த நிகழச்சித்திட்டத்தினை கொண்டு வருகின்றோம். இந்த அரசின் கொள்கையால் நாடு பிளவுபடும் தன்மையை எதிர்கொண்டுள்ளது.

இந்த நேரத்தில் சோசலிச போராட்டங்களுக்கு, நாம் முக்கியத்துவம் கொடுக்க விரும்பவில்லை ஏனெனில், இதற்கு முன்னர் நாட்டை பிளவுபடுவதிலிருந்து பாதுகாக்கவேண்டும்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் தேசிய நிகழ்ச்சித் திட்டம் ஒன்றில் இணைந்து கொள்வதற்கு ஜே.வி.பி.முதலில் முடிவு செய்தது. இதன் மூலம் கூட்டணி ஒன்றை உருவாக்கவும் முயற்சிக்கப்பட்டது.

ஆனால் கூட்டணி அமைக்கும் முயற்சிகள் தோல்வியடைந்த பின்னர் தான், பொதுத் தேசிய நிகழ்ச்சித் திடடத்தை மக்களிடம் சமர்ப்பிக்க முடிவு எடுக்கப்பட்டது எனத் தெரிவித்தார். விகாரமாதேவி பூங்கா முன்றலில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஜே.வி.பியின் தேசிய நிகழ்ச்சித் திட்டம் என்ற நூல் பிரதியொன்று 50 ரூபா என விற்பனை செய்யப்பட்டது.

# இந்த வார பலன்கள்

## 24.10.2003 ~30.10.2003 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சனி |
| செவ் யுரே | 24 பி.இ.6-23 துல-சந்<br>26 பி.இ. 6-11 வீரு-சந்<br>29 காலை 6.35 தனு-சந்<br>29 பி.இ. 6.08 வீரு-சுக் | | |
| நெப் | | | குரு |
| | | சூ. புத சுக் கேது | சந் |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் சிறப்பாகக் காணப்படவில்லை. தொழில் முயற்சிகளால் போதிய இலாபம் கிடையாது. எதிலும் முன்னேற்றம் காண்பது கடினம். செலவுகள் மிகக்கூடுதலாக இருக்கும். கடன்தொல்லைகளும் தலைதூக்கும். தொடங்கும் கருமங்கள் இழுபறிநிலையிலேயே இருக்கும். பிரயாணங்களின்போது, பொருள் நட்டம் ஏற்பட இடமுண்டு. வாகன விபத்துக்கள் பற்றியும் அவதானம் தேவை. உறவினர்களிடையே கருத்து வேற்றுமை காணும். உத்தியோகத்துறையிலுள்ளோர் மேலதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாக வேண்டி வரலாம். வெளிநாட்டுப் பிரயாணங்களுக்கு முயற்சிப்போர் காலதாமதம் காண்பர். வியாபாரிகள் முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. மாணவர்களுக்கு நற்பலன் குறைவு.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதம், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இடபராசியில் பிறந்தவர்களுக்குத் தொழில் முயற்சிகளில் இலாபம் குறைவாயினும், முயற்சிக்கேற்ப இலாபமுண்டு. வரவுக்கேற்ப செலவு செய்யவும். தேகசுகம் பாதிப்பில்லாமல் இருப்பினும், குடும்பத்தில் சிறு மனக்கசப்புக்கள் தோன்றக்கூடும். பிள்ளைகளால் நன்மை உண்டு. திருமணத்தை எதிர்நோக்குவோருக்குத் தாமதமாகவே கருமம் கைகூடும். பொதுவாக மனநிம்மதி குறைந்து காணப்படும். உத்தியோகத்தினருக்கு வேலைப்பழு அதிகமாகும். சக ஊழியர்களின் உதவிகள் கிடைக்காது. வியாபாரிகளுக்கு ஓரளவு இலாபம், வருவாய் இருப்பினும் - முதலீடுகள் தேங்கிக்கிடக்கும். தொழில் சம்பந்தமான பிரயாணங்களுக்கு இடமுண்டு. மாணவர்கள் தேவையற்ற விடயங்களில் தலையிடுவதைத் தவிர்த்து, கல்வியில் ஊக்கமெடுத்தல் வேண்டும்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்)*



மிதுனராசியில் பிறந்தவர்களுக்குப் பலவகையாலும் முன்னேற்றமான வாரமாக அமைகிறது. தொழிற் சிறப்பும், முன்னேற்றமும் உண்டு. வருவாய் அதிகரிக்கும். மனதில் புத்துணர்ச்சி தென்படும். தொடங்கிய கருமங்கள் இனிதாக அனுகூலமாகும். வெளிநாட்டுப் பிரயாணங்கள் மேற்கொள்வோருக்கு அனுகூலமாக அமையும். வழக்குகள் ஏதும் இருப்பின் - சாதகமான பலன் தரும். திருமணம் முதலியனவும் கைகூட வாய்ப்புகள் உண்டு. குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். உத்தியோகத்திலுள்ளவர்கள் தமது தொழிலைச் செவ்வனேசெய்து, பாராட்டைப் பெறுவர். வியாபாரிகள் முயற்சிக்கேற்ப இலாபமடைவர். மாணவர்களுக்கு முன்னேற்றமும், பரீட்சையில் சித்தியும் உண்டாகும்.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசியில் பிறந்தவர்கள் திடீர் முன்னேற்றங்களைக் காண்பர். மனத்தென்பும், புத்துணர்ச்சியும் தென்படும். தொடங்கும் கருமங்கள் விரைவில் இனிதாக அனுகூலமாகும். பலரின் பாராட்டையும், மதிப்பையும் பெறுவார்கள். தூரதேச உறவினர்களின் வருகையால், வீட்டில் மகிழ்ச்சியும், குதூகலமும் காணப்படும். அடிக்கடி பிரயாணங்கள் ஏற்படும். குடும்ப உறவுகள் சிறப்பாக அமையும். மங்கல வாழ்க்கையை எதிர்நோக்குவோர் கருமம் கைகூடப்பெற்று, சந்தோசமடைவார்கள். உத்தியோகத்தர்கள் தமது எண்ணம் போல் கருமமாற்றி, பாராட்டைப்பெறுவார்கள். வியாபாரிகளுக்குத் தேங்கிக்கிடந்த முதலீடுகள் யாவும் விற்பனையாகிப் பணம் சேரும். மாணவர்களுக்குப் பாராட்டுக்களும், சித்திகளும் உண்டாம்.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசியில் பிறந்தவர்களுக்குத் தொழில் நன்றாக நடந்தாலும், அதிக இலாபத்தைக் காணமுடியாது. இடையிடையே தேகசுகம் பாதிக்கப்படலாம். வைத்தியச் செலவுகளும் அதிகமாகும். கொடுக்கல் - வாங்கல்களில் அவதானம் தேவை. பலர் ஏமாற்றுப் பேர்வழிகளிடம் ஏமாற்றமடைய நேரிடும். பிறர் விடயங்களில் தலையிடுவதைத் தவிர்க்கவும். உறவினர்களிடையே கருத்து வேற்றுமைகள் தோன்றலாம். மணமாகாதோருக்கு எடுக்கும் முயற்சிகள் கானல் நீராகிவிடும். வெளிநாடு செல்ல விரும்புவோருக்குக் கருமம் தாமதமடையும். வியாபாரிகளுக்குக் கொடுத்த கடன்களை மீளப்பெறுவது கடினமாக இருக்கும். மாணவர்களுக்குச் சோம்பல் மிகுதியும், மனவிரக்தியும் ஏற்படலாகும்.

### கன்னி

*(உத்தரம் 2, 3 4 ஆம் கால்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னிராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் தொழில் முன்னேற்றங்களும், வருவாயும் அதிகரிக்கும். மனதில் மகிழ்சசி ததும்பும். குடும்பத்தில் கண வன் -மனைவி உறவு பலப்படும். வெளிநாடுகளிலிருந்து சுபசெய்திகள் கிட்டும். இன ஜன பந்துக்களின் வருகை, தொடர்பு அதிகரிக்கும். புது முயற்சிகளில் ஈடுபாடு கூடுதலாக இருக்கும். தூரதேசப் பிரயாணத்தை மேற்கொள்ள இருப்பவர்களுக்கு - யாவும் வெற்றியளிக்கும். காதல் விவகாரங்கள், திருமணங்கள் என்பன விரைவில் கைகூடும். பெரியோர்களின் தொடர்புகள் கிட்டும். உத்தியோகத்திலுள்ளோருக்கு விரும்பிய இடமாற்றங்கள், தொழில் மாற்றங்கள் என்பன கிடைக்கும். வியாபாரிகளும் தமது சரக்குகளை விற்றுப், பணம் சேகரிப்பர். மாணவர்களுக்குச் சித்தி, பாராட்டு என்பன உண்டாம்.

### துலாம்

*(சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்)*



துலாராசியில் பிறந்தவர்களுக்குத் தொழில் சாதாரணமாக அமையும். எனினும், தேவைக்கேற்ற வருவாய் உண்டு. தேகநிலை, குடும்பநிலை நன்றாக அமையும். எக்கருமத்தையும் சற்றுச் சிந்தித்துச் செயலாற்றவும். பிரயாணங்களின்போது மிக அவதானம் தேவை. அயலவர்களுடன் சில கருத்து வேறுபாடுகள் இருக்கும். புது உத்தியோகத்தைத் தேடுபவர்களுக்குத் தாமதம் காட்டும். இல்லற வாழ்வில் இணைய விரும்புவோருக்கு காலம் அனுகூலமாக இருக்கும். வியாபாரம் சம்பந்தமாகப் பிரயாணங்களை மேற்கொள்ளவேண்டி இருக்கும். மாணவர்கள் தமது பாடங்களை அக்கறையுடன் படிக்கவேண்டும்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிகராசியில் பிறந்தவர்களுக்குப் பல நற்பலன்கள் நடக்கும். எனினும், அட்டமத்துச் சனியால், இடையிடையே கஷ்டங்களும் காட்டும். தொழிற்துறையில் ஊக்கம் காணும். பொருளாதார விருத்தி உண்டு. மனத்தில் உற்சாகமும், சுறுசுறுப்பும் காணும். தேகசுகம் நன்றாக அமையும். குடும்பத்தில் சில கருத்து வேறு பாடுகள் தோன்றலாம். புதிய பொருட்கள் வாங்குவதில் கூடிய கவனம் செலுத்துவர். வீட்டில் சுபகருமங்கள் நடக்கும். பிள்ளை களாலும், நண்பர்களாலும் நன்மை உண்டு. உத்தியோகத்தினர் வேலைப்பழு அதிக மாவதால் சிரமப்படுவர். வியாபாரிகளுக்கு விற்பனை முன்னேற்றமடையும். மாணவர்களுக்கு முன்னேற்றமுண்டு.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுராசியில் பிறந்தவர்களுக்குப் பலவகையாலும் கஷ்டந்தரும் வாரமாகவே அமைகிறது. எவ்வளவு தொழில் செய்தாலும், வருவாய் குறைவாகவே இருக்கும். மனதில் நிம்மதியின்மையும், சோர்வும் தோன்றும். தேக சுகக் குறைவும் ஒருபெரும் சவாலாக இருக்கும். வைத்தியச் செலவும் உண்டு. பிள்ளைகளின் உதவி கிடையாமல் போகும். வீண் தொல்லைகளில் மாட்டுப்பட வேண்டிவரலாம். எல்லா விடயத்திலும் அவதானம் தேவை. வெளி நாட்டுப் பிர்யாணங்கள் கைகூடாது. மங்கல வாழ்வை எதிர் நோக்குவோர் ஏமாற்றத்துக்கு உள்ளாவர். உத்தியோகத்தர்கள் வேலைப்பழு காரணமாக மனச்சோர்வு அடைவர். வியாபாரிகளுக்கு இலாபம் குறைவாகவே இருக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். மாணவர்கள் போதிய கவனம் செலுத்தினாலன்றி முன்னேற்றமடைய முடியாது.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகரராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் நன்மை, தீமை கலந்த பலனையே காண்பர். தொழில் முயற்சிகளினால் புதிய வருமானம் கிடைக்கும். எனினும், செலவீனங்கள் மேலும் அதிகரிக்கும். கொடுக்கல் - வாங்கல்கள் தொல்லை தரும். தேகசுகத்தை நன்கு பேணினால், வைத்தியச்செலவு அதிகம் ஏற்படாது. குடும்பத்தில் சில கருத்து வேற்றுமை தோற் றலாம். பிள்ளைகள், நண்பர்கள் உதவு வார்கள். தூரதேச பிரயாணம் தாமதத் தின் பின்பே கிட்டும். திருமணம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் ஆமை வேகத்திலேயே நடக்கும். வியாபாரிகள் குறைந்த இலாபத்தையே பெறுவர். தொழில் சம்பந்தமான பிர யாணத்தை மேற்கொள்ளவேண்டி இருக்கும். மாணவர்களுக்குக் கல்வியில் நாட்டமிராது.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள, சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



கும்பராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் பல முன்னேற்றமான பலன்களைக் காண்பர். புதிய தொழில்கள் தேடிவரும். பண நிலவரம் சிறப்பாக அமையும். தொடங்கிய கருமங்கள் சிறப்பான பலனைத் தரும். குடும்ப நிலைமை சிறப்பாக இருக்கும். இன ஜன பந்துக்கள், நண்பர்கள் ஆகியோரின் வருகையால் வீடு குதூகலமடையும். அலங்காரப் பொருட்களில் நாட்டம் கூடுதலாக இருக்கும். புது உத்தியோகத்தை விரும்புவோர் விரைவில் கைகூடப் பெறுவர். திருமணம் எதிர்பாராதவாறு வந்துசேரும். வியாபாரிகளுக்கு பழைய முதலீடுகள் விற்பனையாகி, நல்ல பணம் சேரும். மாணவர்களுக்குக் கல்வியில் ஊக்கமும், சித்தியும், பாராட்டுக்களும் கிடைக்கும்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம் உத்தராட்டாதி, ரேவதி)*



மீனராசியில் பிறந்தவர்களுக்குச் செய்தொழில் ஊக்கமும், உற்சாகமும் நல்ல வருவாயும் கிட்டும். தேகாரோக்கியம் நன்றாக இருக்கும். மனச்சந்தோசமும், திருப்தியும் உடையவர்களாகக் காணப்படுவர். எக்காரியமும் தடங்கலின்றி, அனுகூலமாகும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். குடும்பப் பெண்கள் மனநிம்மதியுடன் காணப்படுவர். வெளிநாட்டுப் பிரயாணகாரர்களுக்குச் சற்றுத் தாமதமாகிக் கருமம் கைகூடும். திருமணம் சம்பந்தமான விடயங்கள் எளிதில் கைகூடும். வியாபாரிகளின் வியாபார ஸ்தாபனங்களுக்குப் புது வாடிக்கையாளர்கள் வந்து சேருவர். நல்ல வியாபாரம் நடக்கும். மாணவர்களுக்குக் கல்வியில் உயர்ச்சி, போட்டிகளில் வெற்றி என்பன கிடைக்கும்.

# மனித மாண்பை முன்னேற்றும் பணியில்

**வத்திக்கான் நகரிலிருந்து இந்து மக்களின் பெருவிழாவான தீபாவளித் தினத்திற்கென வெளியிடப்பட்ட செய்தியானது, மனித மாண்பை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. பாப்பரசரின் தீபாவளி தின வாழ்த்துச் செய்தியிலிருந்து ....**

உங்களது மதிப்பிற்குரிய சம[illegible]ம்பிரதாயங்களின்படி, நீங்கள் கொண்டாடும் தீபாவளி பெருவிழா தினத்தை முன்னிட்டு, இந்த வருடமும் உங்களை வாழ்த்தி, உங்களோடு ஒரு சிறிய செய்தியைப் பகிர்ந்துகொள்ளவதில் மகிழ்ச்சியடைகின்றேன். வருடம் முழுவதும் நீங்கள் கொண்டாடிவரும் பல்வேறுபட்ட இந்து சமயப் பெருவிழாக்களில் - இந்தத் தீபாவளிவிழா உங்களுக்கும், உங்கள் குடும்பத்தாருக்கும் விசேடமான இடத்தையும், பொருத்தத்தையும் கொண்டுள்ளதென்பது எனக்குத் தெரியும். பழையகால சம்பிரதாயங்கள் சொல்வதுபோல் - சடங்குகளை அர்த்தமுள்ள விதமாகக் கொண்டாட ஒன்றுசேரும் காலம் தீபாவளிப் பெருவிழாக் காலமாகும். உங்கள் ஒவ்வொரு வருக்கும், இந்த விழாவினைக் கொண்டாட இணையும் எல்லாக் குடும்பங்களுக்கும் நான் எனது நல்வாழ்த் துக்களைத் தெரிவிக்கிறேன்.

எல்லா மனிதர்களினதும் உயர் நிலையான கடவுள் நம்பிக்கையைப் புதுப்பிக்கவும், உறுதிப்படுத்தவும், மற்ற மனிதர்களுடனான உறவுகளை மெருகூட்டவும் சமய விழாக்கள் எமக்கு அழைப்பு விடுக்கின்றன. அத்தோடு, கடவுளால் படைக் கப்பட்ட ஒவ்வொரு மனிதனது மனித மாண்பை யும் மீளக் கண்டுபிடிக்கவும், மதிப்புடன் மீள உறுதிப்படுத்தவும், துணிவுடன் பாதுகாக்கவும் அழைபபு விடுகின்றன. தீபாவளிப் பெருவிழாவின்போது, சில இந்துமத சகோதரர்கள் குடும்பங்களிடையேயும், உறவினர்கள். நண்பர்கள், அயலவரிடையேயும் உறவைக் கட்டியெழுப்ப எல்லா முயற்சிகளையும் மேற்கொள்கிறார்கள் என்ற உண்மை - என்னை எப்போதும் கவர்ந்துள்ளது. எமது சொந்தக் கிராமங்கள், நகரங்கள், நாடுகளிடையேயும், பரந்த உலகிலும் - இந்துக்களும், கத்தோலிக்கர்களும் இதுபோன்ற முயற்சிகள் மூலம் பரந்த உறவைக் கட்டியெழுப்பவும், நீடித்த சமாதானத்தை வளர்க்கவும் முயலக் கூடாதா?

நாம் கடவுள்மீது கொண்ட அன்பையும் மட்டுமல்லாமல், மனிதர்கள் தமக்கிடையே கட்டாயம் வைத்திருக்கவேண்டிய அன்பைப் பற்றியும் திறமையாகப் பேசவில்லையா? ஒவ்வொரு மனிதரது மாண்பும் - எல்லோரையும் படைத்த கடவுளிடமிருந்தே பெறப்படுகிறது. இறை நம்பிக்கையுடைய ஒவ்வொருவருடைய வாழ்விலும், இந்த மனித மாண்பை வளர்த்து, பேணிப் பாதுகாக்கும் பணி தவிர்க்கப்பட முடியாத ஒன்றாகிறது. எப்படி ஒளி - இருளை மேற்கொள்கிறது? எப்படி நன்மை - தீமையை வெற்றி கொள்கிறது? எப்படி மன்னிப்பின் மூலமாக, வெறுப்பு - அன்புக்கு இடமளிக்கிறது? போன்ற சிந்தனைகள் மூலமாக, இந்துசமயப் பாரம்பரியத்தில் தீபாவளிப் பெருவிழாவானது - சிந்தனைக்கு நல்விருந்தளிக்கின்றது.

# இந்துக்களும், கிறிஸ்தவர்களும்

கிறிஸ்தவ விசுவாசத்தில் இதயமாக கடவுளன்பும், அயலவர் அன்பும் விளங்குகிறது. இந்த அடிப்படை உண்மையை மறைத்துவிட்டால், நான் சமயத் தலைவர் என்ற பெருமையை இழந்துபோய்விடுவேன். உங்கள் இந்துசமய பாரம்பரியங்களும், சம்பிரதாயங்களும் கடவுள் எம்மீது கொண்ட அன்பையும்,

அன்பான இந்துசமய நண்பர்களே! நீங்களும், உங்கள் குடும்பத்தாரும், நண்பர்களும் உங்கள் மத்தியிலுள்ள அறிமுகம் இல்லாதவர்களும்கூட - மகிழ்வையும், சமாதானத்தையும், தீபாவளிதின ஒளியையும், தீபாவளி குறித்து நிற்கும் எண்ணமுடியாத ஒளிப்பிளம்புகளையும் அனுபவியுங்கள்.

# ஈராக்கை புனர்நிர்மாணம் செய்ய உலக நாடுகள் முன்வர வேண்டும்!

## ஐ.நா.செயலாளர் கோபி அனான்

ஐக்கிய நாடுகளின் செயலாளர் 'கோபி அனான்' ஈராக்கை மீண்டும் புனர்நிர்மாணம் செய்வதற்கு வேண்டிய நிதியை தார்மீக அடிப்படையில்



உலக நாடுகளைக் கொடுத்து உதவுமாறு கேட்டுள்ளார்.

ஸ்பெயின் தலைநகர் மட்றிட்டில் 70 நாடுகள் பங்குகொண்ட கூட்டத்தில் கோபி அனான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

30 பில்லியன் டொலர்கள் ஈராக்கின் நிர்மாணப் பணிகளுக்குத் தேவைப்படுவதாக, அண்மையில் அறிவித்திருந்தார்.

ஆனால், அத்தொகையை உலக நாடுகளிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாகவும் அறியப்பட்டுள்ளது.

இதனிடையே பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகள் ஆரம்பத்திலிருந்தே ஈராக்கின் மீதான அமெரிக்காவின் போருக்கு உடன்பாடு தெரிவிக்கவில்லை. கூடுதலான நிதியை வழங்குவதற்கு அவை மறுத்துள்ளன.

ஈராக்கின் ஸ்திரமற்ற நிலையும், தொடரும் வன்முறைகளும் பல உலக நாடுகள் அந்நாட்டிற்கு உதவிகள் செய்வதற்கு தயக்கம் காண்பிக்கின்றன.

ஆனால், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் அமெரிக்க அரசினால் உலக நாடுகளிடம் இருந்து கூடுதலான நிதியுதவிக்கான மசோதா ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

மட்றிட்டில் நடைபெற்ற கலந்துரையாடலில் பிரான்ஸ் வெளி விவகார அமைச்சர் டொமினிக் டீ விலபின் மீண்டும் ஈராக்கின் இறைமை, தன்னாட்சி தொடர்பாக வலியுறுத்தியிருந்தார். இந்தப் பிரச்சினைக்குரிய தீர்வு பெப்ரவரியில் தெரிவிக்கப்படும் என, ஈராக்கிற்கான அமெரிக்காவின் நிர்வாகி போல் ரெனோல்ட் தெரிவித்தார்.

# அனு ஆயுதம் தொடர்பான

# அமெரிக்காவின் கருத்தினை வடகொரியா ஆராய முடிவு

வடகொரியாவின் பொலியொங்சாங்கில் அமைந்துள்ள அணு ஆயுதம் தொடர்பான செயற்பாடுகளை நிறுத்தினால், வடகொரியாவிற்கு பாதுகாப்பு வழங்கப்போவதாக அண்மையில் அமெரிக்கா தெரிவித்திருந்த கருத்து தொடர்பாக ஆராய்வதற்கு அந்நாடு தீர்மானித்துள்ளது.

சீனாவின் முக்கிய தலைவர் ஒருவரின் வடகொரிய விஜயத்தின் பின், வடகொரிய தனது கருத்தை தெரிவிக்க உள்ளது.

அமெரிக்காவின் உண்மையான நோக்கம் என்ன என்பதை அறிவதில் வடகொரியா ஆர்வம் காண்பித்து வருகின்றது. இதன் பின் புதிய ஆறு நாடுகளிடையேயான பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பாக தீர்மானித்துள்ளது.

தென்கொரியா, அமெரிக்கா, சீனா, யப்பான், ரஷ்யா ஆகிய ஐந்து நாடுகள் வடகொரியாவுடன், அதன் அணு ஆயுதத்திட்டங்கள் தொடர்பாக நடத்திய பேச்சுவார்த்தைகள் முதல் சுற்றில் எதுவித தீர்மானமும் இன்றி முடிவடைந்திருந்தது.

# முன்னாள் பொலிவிய ஜனாதிபதி கன்சோலா சட்டத்தின் முன்னால் தண்டிக்கப்பட வேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

முன்னாள் பொலிவியாவின் ஜனாதிபதி 'கன்சோலா' மீது மனித இனத்திற்கெதிரான குற்றங்களுக்கான சட்டத்தினால் தண்டிக்கப்படவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் 'இவா மொரால்' கேட்டுள்ளார்.



சென்ற மாதம் அரசுக்கெதிராக நடத்தப்பட்ட ஊர்வலங்களில் 70 பேர்வரை கொல்லப்பட்டிருந்தார்கள். இவர்களின் மரணங்கள் தொடர்பாக 'கன்சோலா' தண்டிக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

பதவி விலகிய ஜனாதிபதி வெள்ளிக்கிழமை அமெரிக்காவுக்குச் சென்றுள்ளதாகவும், அமெரிக்க அரசு அவருக்கு பாதுகாப்பு கொடுக்கக் கூடாதென எதிர்க்கட்சித் தலைவர் 'இவா மொரால்' கேட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கன்சோலா' பொலிவியாவில் ஒரு நிலச் சொந்தக்காரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## உலக நோக்கு

# போலியோவால் பாதிக்கப்படுபவர்களில் அரைப்பங்கினர் நைஜீரியர்கள் ஆவர்!

## உலக சுகாதார ஸ்தாபன அதிகாரி

உலகில் போலியோ எனும், நோயால் பாதிக்கப்படும் அரைப்பங்கினர் நைஜீரியாவில் உள்ளதாக கூறப்படுகின்றது. நைஜீரியாவின் எல்லையில் அமைந்த நாடுகளில் இந்த நோய் பரவியதன் பின்னர் 15 மில்லியன் சிறுவர்களுக்கு மேற்கு மத்திய நாடுகளில் இந்த நோய்க்கெதிரான தடுப்பூசி ஏற்றும் பணியில் தொண்டர்களும், சுகாதார பணியாளர்களும், ஈடுபட்டு உள்ளதாகவும், இந்த நோயைப் பரப்பும் "வைரஸ்" நைஜீரியாவின் எல்லைக்கூடாக அருகில் அமைந்துள்ள நாடுகளில் பரவுதலை தடுப்பதுமே தமது முக்கிய நோக்கம் எனவும், உலக சுகாதார ஸ்தாபனத்தின் அதிகாரி "புறூஷ் அயில்சாட்" பி.பி.சி செய்தியாளர் ஒருவருக்குத் தெரிவித்தார்.

"போலியோ மையிலிரிஷ்" எனப்படும் வைரஸினால் இந்நோய் சிறுவர்களிடேயே தொடுகை மூலம் பரப்பப்படுகின்றது அத்துடன், உடல் உறுப்புக்கள் செயலிழந்தும் விடுகின்றது.

# காஷ்மீர் தீவிரவாதிகளுடன் பேச்சு நடத்த இந்திய அரசால் எல்.கே.அத்வானி நியமனம்

(புதுடெல்கி)

இந்தியாவின் உதவிப் பிரதமர் அத்வானி காஷ்மீர் தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக அண்மையில் நியமிக்கப்பட்டிருந்தார். காஷ்மீர் தீவிரவாதிகளை வெகுவிரைவில் சந்தித்து இந்திய அரசின் வேண்டுகோள் தொடர்பாக தீர்மானிப்பதற்கு திட்டமிட்டுள்ளார். ஆரம்பத்தில் காஷ்மீர் தீவிரவாதிகளுக்கும், இந்தியாவிற்கும் இடையே நடைபெற ஒழுங்கு செய்யப்பட்ட பேச்சுவார்த்தைகள் இந்தியாவின் சாதாரண மட்டத்தில் உள்ள அதிகாரிகளால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

இதனால், காஷ்மீர் தீவிரவாதிகள் அவற்றை புறக்கணித்தனர். பத்து ஆண்டுகள் இமாலயப் பிரதேசத்தில் நடைபெற்ற போரில் பல ஆயிரம் மக்கள் மரண மடைந்துள்ளார்கள்.

இதேவேளை காஷ்மீர் தொடர்பான பேச்சுவார்த்தையில் தம்மை இணைத்துக் கொள்ளாதது ஏமாற்றம் தருவதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

## ஆப்கான் தென்பகுதியில்

# அமெரிக்க, ஆப்கான் படையினரால் அல்கொய்டாவிற்கு எதிராக தாக்குதல்

ஆப்கானிஸ்தான் தென்பகுதியை நோக்கி ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆப்கான், அமெரிக்க அரசு சார்பான படையினர் விமானங்கள், தாங்கிகளின் துணையுடன் தலிபான் "அல்கொய்டா" தீவிரவாதிகளுக்கெதிரான தாக்குதலில் ஈடுபட்டுள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் கடந்த வியாழக்கிழமை தெரிவித்தார்.

அர்கண்டாப், நயூபகார், சின்கி ஆகிய மாவட்டங்களை குறியாக வைத்தே இந்த தாக்குதல்கள் தொடர்வதாக இராணுவ அதிகாரி "காஜி சயேட் முகமட்" தெரிவித்தார்.

மேலும் தலிபான் போராளிகள் கைது செய்யப்பட்டதாகவும், போராளிகள் ஒளிந்துள்ளதாக சந்தேகிக்கப்படும் மறைவிடங்களை குண்டு வீச்சு விமானங்கள் தகர்த்ததாகவும், தெரிவிக்கப்பட்டது.

1000 க்கு மேற்பட்ட மோட்டார் சைக்கிள் வண்டிகளை தலிபான் போராளிகள் பாகிஸ்தான் "கூஏட்டா" பிரதேசத்தில் இருந்து ஆப்கானிஸ்தானுக்குள் கடத்தி வந்ததாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோட்டையிலுள்ள வஜிர சிறுவர் இல்லத்தில் பதினொரு சிறுவர்கள் பாலியல் துன்புறுத்தல்

கோட்டை வஜிர சிறுவர் இல்லத்தில் பதினொரு சிறுவர்களை பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தினார்கள் என்ற, 10 பேரின் பிணை மனுவை கொழும்பு மஜிஸ்ரேட் நிராகரித்து, அவர்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சந்தேக நபர்களுக்குப் பிணை வழங்கினால், அந்தப்பிரதேசத்து மக்களின் கோபங்களுக்கு உள்ளாகலாம் என்று, பொலிஸார் நீதிவானுக்கு தெரிவித்தபோதே, நீதிவான் பிணை வழங்க மறுத்துள்ளார்.

பாதிக்கப்பட்ட 11 சிறுவர்களையும் இரட்சணிய சேனையில் ஒப்படைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

தேசிய சிறுவர் நிலைய அதிகாரிக்கு கிடைத்த தகவலையடுத்து, அவர் பொலிஸாருக்கு முறையிட்டு விசாரணையை மேற்கொண்ட போதே, இந்தப் பத்துப் பேரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

## வவுனியாவில் ஒருவர் சுட்டுக்கொலை

வவுனியா மாவட்டத்தில் நேற்று முன்தினம் கிருஸ்ணபிள்ளை கேதீஸ்வரன் (வயது 45) என்பவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

தனிப்பட்ட குரோதத்தினாலேயே இவர் அதிநவீன துப்பாக்கி ஒன்றினால் சுடப்பட்டுள்ளார், எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இச் சம்பவம் தொடர்பாக ஆரம்ப விசாரணையை மேற்கொண்ட வவுனியா மாவட்ட பொலிஸார் இந்தக் கொலைக்கும், புலிகளுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என தெரிவித்தனர்.


# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்

## வலுவூட்டல் பயிற்சி நிலைய கட்டிடம் அமைப்பதற்கான கேள்வி அறிவித்தல்

யாழ் மாவட்டத்திற்கான வலுவூட்டல் பயிற்சி நிலைய கட்டிடம் ஒன்று துரையப்பா விளையாட்டரங்கில் நிர்மாணிக்க தகுதிவாய்ந்த (ICTAD - M8) ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவத்தினையும் வரைபடத்தினையும் மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் அலுவலக நாட்களில் மு.ப. 10.00 மணியிலிருந்து பி.ப 4.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புத்தொகை ரூபா 1000.00 உடன் மீளளிக்கக் கூடிய வைப்புத் தொகையாக ரூபா. 15000.00 உம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்ப படிவத்தினை தபாலுறையில் சீல் முத்திரையிட்டு "அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்" என விலாசமிட்டு மேலுறையின் இடதுபக்க மேல் மூலையில் 'வலுவூட்டல் பயிற்சி நிலைய கட்டிடம் அமைப்பதற்கான கேள்வி விண்ணப்பம்' எனக் குறிப்பிட்டு 31.10.2003 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் பிரதம கணக்காளரின் அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். அன்றைய தினம் பி.ப. 3.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரோ சமுகமளிக்கலாம்.

**செ.பத்மநாதன்**
அரசாங்க அதிபரும்
மாவட்ட செயலாளரும்,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

(சி/1736)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் முயற்சிகளில் எரிக் சொல்ஹெய்ம்!

## நாற்சந்தி

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தின் இருதயப் பகுதியான பெரியகடை எனப் படும் நகரமையம் மக்கள் வெள்ளத்தில் மூச்சுத்திணறிக் கொண்டிருந்தது.

குரல்கள், சப்தங்கள், ஒலிகள், ஓசைகள் என சப்தஸ்வரங்கள் காதை அடைத்தன.

தீபாவளி வியாபாரம் கொடிகட்டிப் பறந்துகொண்டிருந்தது. எங்கிருந்து வந்தனர் இவ்வளவு மக்களும்?

வாகனங்கள் நத்தையிலும் குறைந்த வேகத்தில்கூட நகர முடியாது ஊரமுயன்றும் தோற்று நின்றன...

இந்தளவு மக்களினதும் இம்மாதிரியிலான உற்சாகமும் மகிழ்ச்சியும் இத்தனை காலமும் எங்கே போய்த் தொலைந்தன....?

நகரத்தில் வீதிகளில் புலம்பெயர்ந்த மக்களின் வகையானது சர்வதேச சங்கமத்தைப் போன்றிருந்தது.

என்னதான் இருந்தாலும் யாழ்ப்பாணத்தை அதன் இயல்பை அதற்கேயுரிய பண்பாட்டு விழுமியத்தைத் தொலைத்துவிட்டோம் என்கின்ற உணர்வே மனதை நிறைத்திருந்தது.

ஏன்?

எம்மை நாமே தொலைத்துவிட்டு வேறு யாரோவாக மாறுகிறோமா?

இதனை நீங்களும் உங்களுக்குள்ளே கேட்டுப்பாருங்கள். நான் கேட்பதன் அர்த்தம் புரியும்.

பக்கத்தில் ஒருவரின் பெருமூச்சு பலமாக ஒலிக்கத் திரும்பினேன். எத்தனையாயிரம் மாவீரர்களின் தியாகத்தில் இன்னமும் நிரந்தரம் என உறுதிசெய்யப்படாத இந்த உற்சாக மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதை எவராவது நினைக்கிறார்களா?

கூறியவர் வன்னி மண்ணின் வணங்காமுடிமைந்தன் ஒருவரே...

-தெருவாசி

## அடுத்த மாத முற்பகுதியில் கொழும்பு வருகிறார்



அடுத்த மாத முற்பகுதியில் இலங்கை வரவுள்ள நோர்வே அனுசரணையாளர்கள் - அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே நின்று போயுள்ள, பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவார்களென நோர்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகளால், எதிர்வரும் 31ஆம் திகதி சமர்ப்பிக்கப் படவுள்ள திட்டவரைபினை - அடுத்த மாத முற்பகுதியில் இலங்கை வரவுள்ள நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அடுத்த சுற்றுப் பேச்சுக்கான தயாரிப்புக்களில் ஈடுபடுவாரென நோர்வே தூதரக பெண் பேச்சாளர் தெரிவித்தார்.

இராஜதந்திர வட்டாரங்களும், அரச அதிகாரிகளும் தெரிவித்த தகவல்களில், இங்குவரவுள்ள சொல்ஹெய்ம் அடுத்த வருடம் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரல், அதற்கான இடம், திகதி போன்றவற்றைத் தாயாரிப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது எனவும் தெரிவித்தனர்.

## மன்னாரில் நீதிமன்றம் திறப்பு

மன்னார் பெரிய பாலத்திற்கு முன்பாக புதிதாக நிர்மாணிக்கப் பட்ட நீதிவான் நீதிமன்றமும், மாவட்ட நீதிமன்றமும் நேற்று திறந்துவைக் கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, மாவட்ட அரச அதிபர் உட்பட பெருமளவானோர் கலந்துகொண்டனர். (201)

## சுதந்திரக்கட்சியின் ஆர்ப்பாட்டம் சமய மரபுகளுக்கு முரணானது

### கத்தோலிக்க ஆயர்கள் கருத்து

தீபாவளி தினத்தன்று அரசியல் ஆர்ப்பாட்டம் ஒன்றை கட்சியொன்று நடத்துவது சமய மரபுகளுக்கு முற்றிலும் மாறுபட்ட செயல் என, இலங்கை கத்தோலிக்க ஆயர்களின் மாநாட்டுச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தீபாவளி தினம் மாறுபடும் இனங்களை ஒன்றிணைக்கும் பண்டிகையாக இருக்கவேண்டுமே தவிர, இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் மூலம் வேறுபடுத்துவதாக இருக்கக்கூடாது என கத்தோலிக்க ஆயர்கள் தெரிவித்தனர்.

## பொதுமக்கள்...

ஹர்த்தால் ஒழுங்கு செய்யப்பட்டது. இதனால், கிண்ணியாவிலுள்ள பாடசாலைகள், வங்கிகள் மற்றும் அரச நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தது. போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, நேற்று கிண்ணியாவுக்குச் சென்ற மூன்று விடுதலைப் புலிகளை இராணுவத்தினர் கைதுசெய்துள்ளனர். இவர்கள் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்தே, இராணுவத்தினர் மீதும், பொலிஸார் மீதும் பொதுமக்கள் கற்களை எறிந்து தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இதனையடுத்து, படையினர் மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதில், நான்கு பொதுமக்கள் காயமுற்று, கிண்ணியா ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாகத் தலையிடாததைக் கண்டித்து, திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஃரூப்பின் வீடு பொதுமக்களால், கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும், வீட்டிற்கு முன்னின்ற ஹயஸ் வாகனம் இவர்களால் அடித்து நொருக்கப்பட்டதாகவும், அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (10,04)

## சமாதான நடவடிக்கைக்கு எதிராக கொழும்பில் இன்று பாரிய பேரணி!

### பொ.ஐ.மு. நடத்துகிறது

அரசின் தற்போதைய சமாதான நடவடிக்கைகளை கண்டித்து, பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஏற்பாட்டில், இன்று கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டப் பேரணியொன்று நடைபெறவுள்ளது.

இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கொழும்பில் ஐந்து இடங்களிலிருந்து ஆரமபமாகும் பேரணிகள், மாலை 4 மணிக்கு நகரசபை மைதானத்தை வந்தடைந்ததும், அங்கு பொதுக் கூட்டம் ஆரம்பமாகும்.

இந்தப் பொதுக்கூட்டத்தில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலந்து கொள்வார்.

சுமார் பத்து இலட்சம் மக்கள் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொளவார்கள் என, பொது ஜன ஐக்கிய முன்னணியால் எதிர்பார்க்கப்படுகிறது. மக்கள்படை என்ற பெயரில் நடத்தப்படும் பேரணியில் பிரதான கோஷமாக 'பொறுத்தது போதும்' என்று முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - இன்றைய பேரணியில், கலந்துகொள்ளுமாறு ஜே.வி.பியினருக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும், அவர்கள் இதில் கலந்து கொள்வது தொடர்பாக இந்தச் செய்தி அச்சுக்குப் போகும் வரை எதுவித தகவலையும் வெளியிடவில்லை. (01)

## கராத்தே....

பொறுப்பாளர் கி.பாப்பா, தமிழீழ கராத்தே சங்கத் தலைவர் ரட்ணசோதி மாஸ்ரர், தமிழீழ விளையாட்டுத்துறை ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பத்மநாதன், தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

எழுபத்துநான்கு வயது நிரம்பிய கிராண்ட் மாஸ்ரர் பொனி றொபேட்ஸ் மட்டக்களப்பு கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சர்வதேச கராத்தே போட்டிகளில் முதன் முதலில் கலந்துகொண்ட தமிழ் மகன் என்ற பெருமைக்குரியவர். இவரே, யாழ் மண்ணில் கராத்தே கலையை அறிமுகப்படுத்தியிருந்தார். பொனி றொபேட்ஸ் சர்வதேச சோட்டோ கான் கராத்தே சங்கத்தின் ஜப்பானால் அங்கீகரிக்கப்பட்ட ஏகப்பிரதிநிதியாக இலங்கையில் இருப்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் இறுதியில் கிராண்ட் மாஸ்ரர் பொனி றொபேட்ஸ் தமிழீழத்தில் கராத்தே கலையின் வளர்ச்சிக்கும் அதன் மேம்பாட்டிற்கும் தமிழீழத் தேசியத் தலைவர் ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி கௌரவ விருதாக ஆறாவது கறுப்புப் பட்டியையும், அதற்கான சான்றிதழையும் தமிழீழத் தேசியத் தலைவருக்கு வழங்கிக் கௌரவித்தார்.

## பருத்தித்துறை....

ஒன்று நேற்றுமுன்தினம் படையினரால் தாக்கப்பட்ட பீற்றர்மாறன் என்பவருடையது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - இன்னுமொரு மீனவரின் படகு காணாமல் போயுள்ளதாகவும் - தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவங்கள் தொடர்பாக நேற்று அப்பகுதிக்குச் சென்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவினருக்கு மீனவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (202)

## பருத்தித்துறை...

முறையை நீக்கக் கோரியும், நேற்று முன்தினம் மீனவர்கள் தாக்கப்பட்டமைக்கான காரணத்தை விளக்கக் கோரியும், தாக்கப்பட்ட மீனவரிடம் தாக்கியவர்கள் பகிரங்க மன்னிப்புக் கோரவேண்டுமெனவும், இந்த சம்பவங்களில் ஈடுபட்ட படையினர் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கக் கோரியும் இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்துள்ளதாக கடற்றொழிலாளர் சமாசம் தெரிவித்துள்ளது.

அத்துடன் உரிய நடவடிக்கைகள் எடுக்காவிட்டால் - குடாநாடு தழுவிய ரீதியில் போராட்டங்கள் விஸ்தரிக்கப்படுமெனவும், சமாசம் தெரிவித்துள்ளது. (01)

சக்தியின் உதயம்
உங்களுக்கு மிற்சுயியைத் தந்த டோக்கியோ சீமெந்து நிறுவனம் வழங்கும்
ஹினோடே சீமெந்து
இலங்கை மக்களின் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தி கட்டட நிர்மாணத் துறையில் புத்தொளி பரப்புகிறது






(சி-1622)
ஹினோடே சீமெந்து
சக்தியின் முன்னணியில்

mini INFOTEL LANKA 2003
யாழ்ப்பாணம்
மாபெரும் கணனிக் கண்காட்சி
இன்று, நாளை, நாளை மறுதினம்
மறக்க முடியாதோர் நிகழ்வு..
தவறவிட முடியாதோர் சந்தர்ப்பம்...
தகவல் தொழில் நுட்ப உதவியுடன் என்ன செய்யலாம் என்பதனையும் சகல துறைகளிலும் அது தருகின்ற வரையறையற்ற சந்தர்ப்பங்களையும் கண்காட்சியில் கண்டு கொள்ளலாம்.
அனுமதி
மாணவர் ரூ 10/-
ஏனையோர் ரூ 20/-
தவறவிடாதீர்கள்!
Official Airline Official Bank Official Sponsors
NSB PC House Solutions intel.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தீபாவளி சிறப்பு மலர்

## தமிழர் பண்டிகைகளில் சிறப்பான தீபாவளி

இந்துப் பண்டிகைகள் ஆன்மீக தத்துவ அடிப்படைகளில் எழுவன. ஆன்மீக தத்துவத்தை ஆதாரமாகக் கொண்டு புராணங்கள் புனையப்படுகின்றன, புராணக்கதைகள்- தேவர்கள், அசுரர்கள் ஆகியோருக்கிடையிலான போராட்டங்களை மையமாகக் கொண்டவை. இவை முறையே நன்மைக்கும், தீமைக்கும் இடையிலான போராட்டங்களேயாகும். எத்துணை கஷ்டங்கள் நேரிலும், இறுதியில் தீமைகள் அழியும், நன்மைகள் வெல்லும் எனும் உண்மை நிலைநாட்டப்பெறும். ஒவ்வொரு பண்டிகையும் தோன்றுவதற்குக் காரணமான அடிப்படை உண்மையும், அதனை எளிதில் விளக்குவதற்குத் தோற்றுவிக்கப்பட்ட புராண வரலாறும் நம் முன்னோரினால் நமக்குத் தரப்பட்டுள்ளன.

தீபாவளி- இந்துக்களின் தலையாய பண்டிகை. தீபாவளி - தீபங்களின் வரிசை என்ற பெயருக்கேற்ப, மக்கள் தங்கள் விடுகளில் பளிச்சென்று விளக்கேற்றிக் கொண்டாடுவார்கள். ஞானம் என்ற விளக்கொளியால் மனத்திலுள் குடிகொண்டுள்ள அஞ்ஞானம் என்ற இருளை விரட்டியடிப்பது என்பது தத்துவம். பொய், பித்தலாட்டம், வஞ்சனை முதலிய அரக்ககுணங்களை - ஞான ஒளியால் வெளியேற்றி அக ஒளிபெற உதவும் பண்டிகை தீபாவளி.

நரகாசுரன் எனும் அரக்கனை - கண்ணன் வதம் செய்ததன்மூலம் அமைந்த பண்டிகை என்பது புராண வரலாறு. தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் - கொடிய அரக்கனாம் நகரகாசுரனால் பெருந் தொல்லைகளுக்குள்ளாகித் துன்புற்றனர்.

தேவர்களின் தலைவரான இந்திரன் - பகவான் கிருஷ்ணனிடம் முறையிடவே, கிருஷ்ணன் - நராகாசுரனுடன் போர்புரிய, சத்தியபாமாவுடன் புறப்படுகின்றார். சத்தியபாமா இப்போரில் சக்தியின் அவதாரமாகச் செயறபட்டாா என்பது குறிப்பிடத்தக்கது. நரகாசுரன் என்ற தீயசக்தி- கண்ணன், சத்தியபாமாவினால் அழிக்கப்பட்டு மக்கள் - அசுரனின் கொடுமையிலிருந்து விடுபட்ட தினத்தையே தீபாவளியாகக் கொண்டாடுகிறோம்.

தீபாவளி அன்று விடியற்காலையே எழுந்து தலைக்கு எண்ணெய் தேய்த்து புனித நீராடுவதை- கங்காஸ்ஞானம் எனக் கருதுகிறோம். இப்பண்டிகை நாளில் எண்ணெயில் லஷ்மியும், நம் வீட்டுத் தண்ணீரில் கங்கையும் பிரசன்னமாகின்றனர் என்பது ஐதீகம்.

வீட்டுக் கிணற்றின் நீரிலோ அல்லது குழாயில் வரும் நீரிலோகூட தீபாவளியன்று நீராடினால், புனித கங்கையில் நீராடியபலன் கிட்டும். என்பது ஆன்றோர் வாக்கு, அதனால் தான் இப்பண்டிகையன்று நீராடிப் புத்தாடை உடுத்து, இறைவனைத் துதித்து, இனிப்புப் பண்டங்கள் புசித்து மகிழ்ந்து, பின்னர் அக்கம் பக்கத்தில் வசிக்கும் உற்றார், உறவினரிடம் "கங்காஸ்நானம் ஆயிற்றா" என்று விசாரிக்கிறோம்.

தீபாவளியன்று இன்னோர் முக்கிய நிகழ்வு உண்டு. அதாவது, திருமணமான முதல் ஆண்டு வரும் தலை தீபாவளியன்று- மாப்பிள்ளையைக் கோலமிட்ட மனையில் உக்கார வைத்து "கௌரிகல்யாணமே, வைபோகமே" என்று மாமியார் பாடித் தலையில் எண்ணெய் வைப்பது தமிழ் நாட்டவர் பழக்கம்.

பட்டாசு கொளுத்துவதன் மூலமும் ஆயிரமாயிரம் குடும்பங்கள் பிழைக்கவும் இந்த தீபத் திருநாள் வழிவகுக்கிறது. புத்தாடை உடுத்தும் வழக்கம் நம்மிடையே இருப்பதால், இந்நாளில் புத்தாடைகளுக்கு மவுசு ஏற்படுகின்றது.

இப்பெருநாளில் இந்துக்கள் மட்டுமன்றிப் பிறமதத்தவரும் தங்கள் வீட்டுப் பிள்ளைகளுக்குப் பட்டாசும், ஏன் - புத்தாடையும்கூட வாங்கிக் கொடுத்து மகிழ்கின்றார்கள். இந்தியாவில் ஒவ்வொரு வீட்டிலும் அகல் விளக்கேற்றி இத்திருநாளைக் கொண்டாடுவது மரபாக பேணப்பட்டு வருகின்றது.

இனிய தீபாவளித் தினத்தில்
வாடிக்கையாளர்கள் அனைவரையும்
வாழத்துகின்றோம்.
மந்திகையில் சிறந்த சைவ உணவகத்திற்கு
நாடவேண்டிய இடம்
ஸ்ரீதேவி சைவ உணவகம்
உரிமையாளர்: மா.ஈஸ்வரபாதம்
சாவகச்சேரி றோட்,
மந்திகை, புலோலி.
(சி-1706)

தீபாவளித் தினத்தில் வாடிக்கையாளர்களை
வாழத்துகின்றோம்.
கீரன் மளிகை ஸ்தாபனம்
AND
மாலா வீடியோ விஷன்
உரிமையாளர்: வி.இளங்கோ
புறாப்பொறுக்கி, ஆலடி,
இமையாணன், உடுப்பிட்டி. (சி-1707)
T.P No: 0777067134

அனைவருக்கும் எமது தீபாவளி
நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.
கணினி எழுத்துக்களாலான இறப்பர்
முத்திரை, புத்தகக்கவர்களுக்கான
லமினேற்றிங், நினைவு மலர்களுக்கான
வர்ணப்படங்கள் என்பவற்றைப்
பெற்றுக்கொள்ள
நீங்கள்
நாடவேண்டிய இடம்
பிள்ளையார் அச்சகம்
676, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
தொலை சேி: 222 6722
(சி.1718)

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்.
யாழ்.நகரில் சிறந்த சீரான சிகை அலங்கரிப்புத் தேவைகளுக்கு அனுபவம்
வாய்ந்த சிகை அலங்கரிப்பாளர்களால் விரும்பும் விதத்தில் சேவையைப்
பெற்றுக்கொள்ள
சிற்றி BOY சலூன்
இல.256, கன்னாதிட்டி சந்தி,
யாழ்ப்பாணம்.
(சி-1714)
உரிமையாளர் : சசி,
ஊழியர்கள்.

எமது வாடிக்கையாளர்களுக்கு தீபாவளி நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.
RAJU STORES (RAJU BUILDING)
67, 69 KASTHURIAR ROAD, JAFFNA.
WESTERN UNION | MONEY TRANSFER
பணம் மாற்றுபவர்களுக்கு எமது அன்பளிப்புகள்
வழங்கப்படும்.
தொ.பே: 21 - 222 5224 (சி-1717)

வாடிக்கையாளர்களை இத் தீபாவளித் திருநாளில்
வாழத்துகின்றோம்.
மணப் பந்தல் சேவை
உங்கள் திருப்தியே எங்கள் நோக்கம்
உரிய நேரத்தில் குறைந்த செலவில் மணப்பந்தல்
சேவைக்கும், கதிரை, பாய் வாடகைக்கும் நீங்கள்
நாடவேண்டிய சிறந்த ஸ்தாபனம்
நிலாஜினி மணப்பந்தல்
"கேணியடி"
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி. (சி-1755)
உரிமையாளர்:
க.இராசமாணிக்கம்

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் எமது இனிய தீபாவளி வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.
யாழ்.மண்ணிற்கு முதன்முதலில் மேசைத் தொலைபேசியை
அறிமுகப்படுத்திய பவர்செலுலர் நிறுவனத்தினர் தமது
சேவையை மேலும் விரிவுபடுத்தியுள்ளனர்.
24 மணிநேரத்தில் பூட்டித் தரப்படும். காலம்
பொன்னானது உங்கள் உறவுகளுடன்
உரையாடிமகிழ உடன்
விஜயம் செய்யுங்கள்.
SAGEM
உத்தரவாதம் உண்டு
பவர் செலுலர் ரேடிங் கம்பனி
இல. 185/1 ஆம் மாடி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ராஜா தியேட்டர் அருகாமையில்)
T.P: 071-2399220
Fax : 071-2381125
Mobile - 0777 - 242416
E-Mail Power @ Cik
(சி-1721)

அனைவருக்கும் எமது இனிய
தீபாவளி வாழ்த்துக்கள்
ராசி சில்க்ஸ்
நல்லி சில்க்ஸ்
இன் இணைந்த சேவை
உங்கள் ரசனைக்கும் தேவைக்கும் ஏற்ப சகல வகையான
சாறிகள், பஞ்சாபி அன் சோளிகிற், சிறுவர்கள்,
இளையவர்களுக்கான றெடிமேட் ஆடைகள் அனைத்திற்கும்
இன்றே நாடுங்கள்
ராசி சில்க்ஸ்
70,71A,நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.
T.P. 021 -222 5571 (சி-1722)
நல்லி சில்க்ஸ்
121/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 -222 5573

தீபாவளித் திருநாளில் பேதங்கள், பகுப்புகள் யாதுமின்றி வாழ,
வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்களை
வாழ்த்துகின்றோம்.

தரத்திற்குச் சான்று




அன்னா கோப்பி

உடனுக்குடன் உங்கள் முன்னிலையிலேயே
அன்னா கோப்பியை அரைத்துப் பெற்றுக்கொள்ளவும்

தரமான மல்லிக் கோப்பி
SPICE COFFEE
வெளிநாட்டுக்குக் கொண்டுபோய்ப் பாவிக்க உகந்த முறையில்
தயாரிக்கப்பட்டது.
அண்ணா கோப்பிக்கடை, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொ.பே : 2222382
(சி-1687)

சிறிகரன் தையலகம்

நவநாகரீகமான முறையில் ஆடைகள் தைத்துக் கொடுப்பதுடன்,
எங்களது இன்னோர் சேவையாக டயலொக் காட் விற்பனையும் நியாய
விலையில் இடம்பெற்று வருகிறது.
தித்திக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்களை
வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களிற்குத்
தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்வடைகின்றோம்.
சிறிகரன் தையலகம்,
ஆலடிச் சந்தி,
மானிப்பாய்.
உரிமையாளர்.
(சி-1691)

எம் இனிய வாடிக்கையாளர்களுக்கு
இனிய தீபாவளி வாழ்த்துக்கள்
நவ நாகரிக ஆடைகளின்
உறைவிடம்
MANGAI
மங்கை சில்க்ஸ்
8 நவீன சந்தை, (சி-1688) சுன்னாகம்.

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும், இனிய தீபாவளி வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்




புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், வாழ்த்து
மடல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள்
அனைத்தையும் பெற்றுக்கொள்ள நீங்கள்
நாடவேண்டிய இடம்




பூபாலசிங்கம் புத்தகசாலை

இல.04, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-1687)

சிந்தனையில் நல்லுணர்வைத் தூண்டும்
தீப ஒளி பிரகாசிக்கட்டும்
ஆடவர், மகளிர், சிறுவர், சிறுமிகள் அனைவருக்கும் ஏற்ற
அனைத்து துணிமணிகளையும் உங்கள் எண்ணம்போல்
வண்ணம் வண்ணமாக, எண்ணற்ற ரகங்களை மலிவான
விலையில் தெரிவு செய்திட நீங்கள் நாடவேண்டிய
ஒரே நிறுவனம்
சீமாட்டி புடவைக்கடல்
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(சி-1690)

வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
சிவாஸ்
மணிக்கூட்டுத் தொழிலகம்
SIVAS WATCH WORKS
24, முனீஸ்வரன் வீதி,
ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகிலுள்ள வீதி,
யாழ்ப்பாணம். (சி-1689)

திருமண அழைப்பிதழ்கள்
Wedding Invitation
திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன!
ஆனால்,
அதன் அழைப்பிதழ்கள் இங்கேதான் தெரிவுசெய்யப்படுகின்றன.
252, Point Pedro Road, Nallur, Jaffna.
T.P : 0777 737438
(சி-1686)

சிந்தனையில் நல்லுணர்வைத் தூண்டும்
தீப ஒளி பிரகாசிக்கட்டும்
"தீபாவளி" கொடுக்கல் வாங்கல் வைபவத்திற்கான
அழைப்பிதழ்

PEOPLE'S BANK

இந்து மக்களின் புனித தீபத்திருநாளாம் தீபாவளி தினத்தன்று (24.10.2003) வெள்ளிக்கிழமை கொடுக்கல் வாங்கல்களுக்காக சகல கிளைகளும் காலை 9.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணிவரை திறந்திருக்கும் என்பதை சகல வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

அன்றைய தினம் ரூபா 10,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினை 1 வருட காலத்திற்கு, சேமிப்புக் கணக்கிலிடும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் எமது பாரம்பரியத்தைப் பேணும் வகையில் அழகிய தீப விளக்கொன்று அன்பளிப்பாக வழங்கப்படும். இக்கணக்குகள் யாவும் "ஜெயசிறி" சீட்டிழுப்பிற்கு தகுதி பெறும்.

இத்தகைய பாரம்பரிய முக்கியத்துவம் வாய்ந்த வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மக்கள் மனமறிந்த வங்கி மக்கள் வங்கி
(சி-1685)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திவான்

பாடசாலை அதிபர்களே!
மாணவ மணிகளே! வந்துவிட்டது.

**வியாபாரக்குறியீடு கொண்ட கணக்குக் குற்றிகள் இன்றே விஜயம் செய்யுங்கள்.**

பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுக்கான பாடப்புத்தகங்கள், உபகரணங்கள், பேப்பர் வகைகள், பைண்டிங் வகைகள் மற்றும் தரமான உள்வீட்டுப் பொருட்களுக்கான மூலதனப் பொருள்கள், அழி பொருள்கள், வாத்தியக் கருவிகள், விளையாட்டுப் பொருட்கள், அலுவலக அலுமாரி, அலுவலக மேசைகள், பயில் அலுமாரி, கம்பியூட்டர் மேசைகள், புத்தக றாக்கைகள், ஆய்வுகூட இரசாயனப் பொருள்கள், ஆய்வுகூட உபகரணங்கள், O.H.P புறஜெக்ரர் போன்றவற்றைப் பெற்றிட நீங்கள் நாட வேண்டிய இடம்.

## ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 - 222 5542
(சி-1696)

இன்பத் தீபாவளியின் இனிய கொண்டாட்டத்தில் நமது இதயங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்களை அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- பொங்கிடும் பார்வையைப் பெற்றிடவும்
- உறுதியான அழகான வெண் சங்குப்பற்களைக் கட்டிடவும்

## எரிக்கணேஷ்

**யாழ்ப்பாணத்தில் கைதேர்ந்த ஒரே ஸ்தாபனம்**

மூக்குக் கண்ணாடியகமும், பல்கட்டுமிடமும்.
564, 566 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
T.P. 2486
(சி-1693)

கிளைகள் -
பழைய பொலிஸ் நிலையம் முன்பாக
இல. 80 கே.கே.எஸ்.வீதி
சுன்னாகம்.
இல. 91 கே.கே.எஸ் வீதி
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

இனிய தீபாவளித் திருநாளில் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சைக்கிள் உதிரிப்பாகங்கள், இரும்புப்பொருட்கள், மின்சார உபகரணங்கள் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள உடுப்பிட்டியில் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்**

## குருநாதர் ஸ்ரோர்ஸ்

V.V.T. வீதி,
உடுப்பிட்டி.
(சி-1704)

இதயங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்களை அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ் நகரில்

## விமாகி

தரமான வோல் ரைல்ஸ், புளோர் ரைல்ஸ், குளியலறைப் பொருட்களை கடந்த 25 வருடங்களாக விற்பனை செய்பவர்களும் மற்றும் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கிளாஸ் வகைகள், அன்பளிப்புப் பொருட்களின்

**முன்னோடி விற்பனை நிலையம்**

இல. 27/3, மின்சார நிலையவீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. : 222 6738

தலைமை அலுவலகம்
51, டாம் வீதி,
கொழும்பு - 12
T.P : 423030.
(சி-1701)



அனைவருக்கும் தீபாவளி சிறப்புற வாழ்த்துகின்றோம்.


## தில்லையம்பதி மோட்டோர்ஸ்

GREAVES



இல.236, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 222 2488, 021 - 2223820
**AGENTS FOR - GREAVES, SPARE PARTS**

விவசாய நீர் இறைக்கும் இயந்திரம், மின்சார நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்கள், மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.



(சி-1709)

## வடமராட்சியில் புதியதோர் உதயம்

இதயங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்களை அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.


சகல விதமான மரத்தளபாட ஒப்பந்தங்கள் மற்றும் வீட்டுத் தீராந்திகள், கோயிலுக்குரிய தீராந்தி வகைகள், பலகை வகைகள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

## ஹரிகரன் மரத்தளபாட மொத்த விற்பனை நிலையம்

புறாப்பொறுக்கி, ஆலடிச்சந்தி,
(இமையாணன் அரசினர் தமிழ் கலவன்
வித்தியாலயத்திற்கு அருகில்)
(சி-1705)

## எங்கள் வீட்டின் - எங்கள் குடும்பத்தின் - எங்கள் பயணத்துக்கு பஜாஜ் ஒன்றுதான்





விலை ரூ. 195,350/- இலிருந்து மேல்
(எல்லா வரிகளும் அடங்கும்)

**வீட்டில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பயணங்கள் உண்டு.**
அந்த போக்குவரத்துக்காக வீணாகும் செலவையும், நேரத்தையும், களைப்பையும் குறைப்பதற்கும், அந்த செலவழியும் பணத்தையும் காலத்தையும் சேமித்து அதை எங்களின் குடும்ப முன்னேற்றத்துக்காக பயன்படுத்த எங்களின் பஜாஜ் வண்டியினால்தான் உதவ முடிந்தது.

பஜாஜ் முச்சக்கர வண்டி அன்றுபோல் இன்றும், இன்றுபோல் நாளையும் எங்களின் முன்னேற்றத்துக்கு கைகொடுத்து உதவ எங்களுடன் தொடர்ந்து இயங்கும் என்பது எங்களின் விசுவாசம்.



பஜாஜ் - எனது நண்பன்



பஜாஜ் - எனது கைஉதவியாளன்



பஜாஜ் - எனது மூத்தவன்



பஜாஜ் - எனது காவலன்

### டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்

த.பெ. 1909, 75, ஹைட்பார்க் கோனர், கொழும்பு 02. தொ. பே: 074-700600. பக்ஸ்: 074-700677, 2687175 Web Site: http//:www.dpmco.com

பிரதேச கிளை அலுவலகங்கள்: ● 174B, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி. தொ. பே: 082-226146 பக்ஸ்: 082-238134 ● 27 E, வியாபார ஸ்தானம், தெகியத்தகண்டிய. தொ. பே: 027-2250037 பக்ஸ்: 027-2250222 ● 382, அனகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை. தொ. பே: 041-2228488 பக்ஸ்: 041-2227488 ● நீகல் மாவத்தை, அம்பாறை. தொ. பே: 063-2222937 பக்ஸ்: 063-2223662 ● 31பீ, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம். தொ. பே. 025-2225048/9 பக்ஸ்: 025-2225050 ● தனசிரி கட்டிடம், இல. 195, பிரதான வீதி, இரத்தினபுரி. தொ. பே/பக்ஸ்: 045-2222389 ● இல. 116, குருணாகல் வீதி, புத்தளம். தொ. பே: 032-2267410 பே/பக்ஸ்: 032-2267411 ● பிராந்திய அலுவலகம் இலக்கம் 72, நூர்கா கட்டிடம், பாக் வீதி, நுவரெலியா. 052-2235760/61/62/63 பக்ஸ்: 052-2235764 ● இல. 83, கண்டி வீதி, மக்கல. தொலைபேசி: 074-672019 தொலைபேசி/பெக்ஸ்: 033-2225522 ● இல. 30, ரேஸ்கோஸ் வீதி, பதுளை. தொ. பேசி: 055-2224800/1

மேல் விபரங்களுக்கு இக்கூப்பனை நிரப்பி கீழ் குறிப்பிட்ட விலாசத்திற்கு தபாலில் அனுப்பி வையுங்கள்.

பெயர் ........................................................................

விலாசம் ........................................................................

சேவை நிலையம் ................................................ தொலைபேசி ....................

பஜாஜ் முச்சக்கர வண்டி பற்றிய மேல் விபரங்களை அனுப்பி வையுங்கள்.

Tradlanka Advertising





# மாடந்தையில் ஓர் புதிய உதயம்

அரிசி, உழுந்து, பயறு, மிளகாய் போன்ற தானியங்களையும், ஊறவைத்த அரிசி, அரிசி என்பவற்றையும் சிறந்த முறையில் உடனுக்குடன் அரைத்துப் பெற்றுக்கொள்ளவும் சகல விதமான பலசரக்கு பொருட்களைபெற்றுக்கொள்ளவும் மாடந்தையில் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

# விநாயகர் ஸ்ரோர்ஸ் அன் விநாயகர் கிரைண்டிங் மில்

(மாடந்தை சித்திவிநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில்)

அத்துடன்

தரம் மிக்க தம்ரோ, நில்கமல், கொனெக்ஸ் பிளாஸ்ரிக் கதிரைகள், பிளாஸ்ரிக் தளபாடங்கள், வீட்டுத் தளபாடங்கள், வீட்டுப்பாவனைப்பொருட்கள், பாய் வகைகள் என்பனவற்றை எம்மிடமும் எமது கிளை நிறுவனமான

# திருபா விநாயகர் அன் கேதீஸ்வரன் ஸ்ரோர்ஸ்

# AND

# திருபா விநாயகர் அன் கேதீஸ்வரன் கூல்பார்

உடுப்பிட்டி மார்க்கட் உடுப்பிட்டியில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். எமதுகிளை நிறுவனத்தில் நாவூறும் சுவைமிக்கசிற்றுண்டிகளையும், சகல விதமான குளிர்பானங்களையும் பெற்றுக்கொள்ளலாம். வைபவங்களுக்குரிய பாய், கதிரைகள் என்பவற்றை எம்மிடம் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம் என்பதனையும் அறியத்தருகிறோம். எமதுவாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய தீபாவளித் திருநாள் வாழ்த்துக்கள்.

கிளை ஸ்தாபனம்
உடுப்பிட்டி மார்க்கட்,
உடுப்பிட்டி.
T.P:0712370446

மாடந்தை வீதி,
(மாடந்தை சித்திவிநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில்)
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.